விலை ரூபா: 3-50

# ஈழநாதம்

THE EELANAATHAM

நாதம் 01 | சுக்கில ஹூ மாசி மீ 24-ம் உ | வியாழக்கிழமை | (08 - 03 - 1990) | ஹிஜ்ரி 1410 | ஷஃபா 10 | ஓசை 18

## மட்டக்களப்பில் சிறிலங்கா இராணுவம் ஒரே முகாமில்!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள ஸ்ரீலங்கா இராணுவ முகாம்கள் யாவும் வாபஸ் பெறப்பட்டு ஒரே இடத்திற்கு கொண்டுவரப்படவிருப்பதாக தெரிய வருகிறது.

புல்லுமலை, கரடியனாறு, கிரான், களவாஞ்சிக்குடி ஆகிய முகாம்கள் வாபஸ் பெறப்படவுள்ளன.

இம் முகாம்கள் வாபஸ் பெறப்பட்டு கிரான் கல்லடியிலுள்ள முகாமில் மட்டும் இராணுவம் தொடர்ந்து இருக்கும் என தெரியவருகிறது.

(37)

# ஒரு கட்சி ஆட்சி அல்ல; மக்கள் தீர்மானிக்கட்டும்

## போர் முடிந்தது; சமூக சீராக்கம் இதுவே இன்றுள்ள முதல் பிரச்னை

(கொழும்பு)

--- மகேந்திரராசா

"தமிழர் பிரச்சினைக்கு இராணுவ ரீதியில் அல்லாது பேச்சுவார்த்தைமூலம் அரசியல் தீர்வுகாண்பதே எங்கள் தற்போதைய அணுகுமுறை. ஜனாதிபதி பிரேமதாசாவுக்கும், விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியினராகிய எங்களுக்கும் இப்பொழுது அடிப்படைப் பிரச்சினை ஏதுமில்லை" என்று தமிழீழ விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணித் தலைவர் திரு. கோபாலசாமி மகேந்திரராசா (மாத்தயா) நேற்று பி. பி. ஸி. யின் கொழும்பு நிருபர்களில் ஒருவரான திரு. மேர்வின் டி. சில்வாவுக்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்திருந்தார்.

கடந்த இரண்டரை ஆண்டுகளாக இந்திய இராணுவத்துடன் நாங்கள் நடத்திய சண்டையின் விளைவாக வடக்கு கிழக்கில் வகுப்பு மற்றும் ஜாதித் தடைகளை உடைத்தெறிய உதவியிருக்கிறது.

என்று பதிலளித்தார். பல கட்சி அரசியலையே நாங்கள் விரும்புகிறோம். தேர்தல் நேர்மையானவையாக நடைபெற வேண்டும். மக்கள் சுதந்திரமாக வாக்களிக்க வேண்டும். மக்கள் முடிவு செய்யட்...

புலிகள் மக்கள் முன்னணியின் செயலாளர் திரு. யோகரத்தினம் யோகியும், அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கமும் உடனிருந்தனர்

இந்தியத்துருப்புக்களை நாட்டிலிருந்து வெளியே...

...திபதி பிரேமதாசாவுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் இப்பொழுது நடைபெறும் பேச்சுவார்த்தைகளுக்குக்காரணம்? என்ற கேள்விக்கு திரு மாத்தயா பதிலளிக்கையில் கூறியதாவது


ஜனாதிபதி பிரேமதாசாவுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் இப்பொழுது அடிப்படை முரண்பாடுகள் இல்லை. இந்திய இராணுவம் வெளியேற வேண்டுமென்பது இருதரப்பினரின் கருத்தாகும் தமிழர் பிரச்சனைக்கு இராணுவரீதியில் அல்லாது அரசியல்ரீதியில் தீர்வு காணப்பட வேண்டும் என்று இருதரப்பி...

# மினிபஸ் மோதிய மேஜர் காண்டீபன் மரணம்

(யாழ்ப்பாணம்)

மேஜர் காண்டீபன் காலமானார். கடந்த ஞாயிற்றுக்கிழமை மினிபஸ்ஸினால் மோதுண்ட காண்டீபனுக்கு தலையில் பலத்த காயம் ஏற்பட்டதனால் இம் மரணம் சம்பவித்தது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை ஆஸ்பத்திரி வீதியில் மோட்...



...டார் சைக்கிளில் இருந்த போது மிக வேகமாக வந்த மினிவானினால் மோதுண்ட மேஜர் காண்டீபன் தலையில் பலத்த காயத்துடன் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார். தலையில் உடனடியாக சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. ஆனால் பலமான காயம் ஏற்பட்டிருந்ததினால் டாக்டர்கள் அவரின் உயிருக்கு உத்தரவாதம் அளிக்கவில்லை உடனடியாக கொழும்புக்கு கொண்டுசெல்ல முயற்சிகள் எடுக்கப்பட்டன, ஆயினும் அவரது உடல்நிலை பயணத்திற்கு ஏதுவாக இருக்கவில்லை.

மேஜர் காண்டீபனுக்கு இருபது வயதாகும். இவர் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியின் பழைய மாணவராவார். இவர் நாவற்குழியில் வெடிவிபத்தில் இறந்த தென்மராட்சிப் பொறுப்பாளர் மேஜர் கேடில்ஸ் சின் சகோதரராவார் என்பது குறிப்பிடத்தக்கது. அத்தோடு இவர் இந்திய இராணுவத்துடனான மோதலில் யாழ்ப்பாணத்தில் இருந்து தீவிரமாகச் செயற்பட்டவர் என்பதும் குறிப்பிடத்தக்கது:

கடந்த இரண்டு ஆண்டுகளில் மிக நெருக்கடியான காலகட்டத்தில் மக்களோடு நின்று மக்கள் பணிக்காக தன்னை அர்ப்பணித்த காண்டீபன் சிறிது காலம் யாழ் நகரப் பொறுப்பாளராகவும் கடமையாற்றினார்.

## வெல்வேரி முகாம் மூடப்பட்டது

(திருகோணமலை)

திருமலையில் வெல்வேரி என்ற என்ற இடத்திலிருந்த இந்திய இராணுவ முகாம் நேற்று முன்தினம் மூடப்பட்டதாகத் தெரிய வருகிறது.

(6 ஆம் பக்கம் பார்க்க)

# யாழ். குடாநாடு சோகமயம்;

# இதுவே இன்றுள்ள முதல் பிரசனை

### --- மகேந்திரராசா

(கொழும்பு)

**"தமிழர் பிரச்சினைக்கு இராணுவ ரீதியில் அல்லாது பேச்சு வார்த்தைமூலம் அரசியல் தீர்வுகாண்பதே எங்கள் தற்போதைய அணுகு முறை. ஜனாதிபதி பிரேமதாசாவுக்கும், விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியினராகிய எங்களுக்கும் இப்பொழுது அடிப்படைப் பிரச்சினை ஏதுமில்லை" என்று தமிழீழ விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணித் தலைவர் திரு. கோபாலசாமி மகேந்திரராசா (மாத்தயா) நேற்று பி. பி. ஸி. யின் கொழும்பு நிருபர்களில் ஒருவரான திரு. மேர்வின் டி. சில்வாவுக்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்திருந்தார்.**

கடந்த இரண்டரை ஆண்டுகளாக இந்திய இராணுவத்துடன் நாங்கள் நடத்திய சண்டையின் விளைவாக வடக்கு கிழக்கில் வகுப்பு மற்றும் ஜாதித் தடைகளை உடைத்தெறிய உதவியிருக்கிறது.

வடக்கிலும் கிழக்கிலும் ஒரு கட்சி ஆட்சி அமைப்பதுதான் விடுதலைப் புலிகளின் நோக்கமா என்று மேர்வின் டிசில்வா கேட்ட கேள்விக்கு திரு. மகேந்திரராசா (மாத்தயா) பதிலளிக்கையில் ஒரு கட்சி அமைப்பது எங்கள் நோக்கமல்ல,' என்று பதிலளித்தார். பல கட்சி அரசியலையே நாங்கள் விரும்புகிறோம். தேர்தல் நேர்மையானவையாக நடைபெற வேண்டும். மக்கள் சுதந்திரமாக வாக்களிக்க வேண்டும். மக்கள் முடிவு செய்யட்டும், போர் முடிந்து விட்டது. நாங்கள் எங்கள் வாழ்க்கையையும் சமுகத்தையும் சீரமைக்க வேண்டும்'' என்று திரு. மாத்தயா சொன்னார்.

திரு. மேர்வின் டி. சில்வாவுக்கு திரு. மாத்தயா பேட்டி அளித்த போது விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் செயலாளர் கிரு. யோகரத்தினம் யோகியும், அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கமும் உடனிருந்தனர்.

இந்தியத்துருப்புக்களை நாட்டிலிருந்து வெளியே அனுப்ப வேண்டுமென்ற அடிப்படை அக்கறைதானா ஜனாதிபதி பிரேமதாசாவுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் இப்பொழுது நடைபெறும் பேச்சுவார்த்தைகளுக்குக்காரணம்? என்ற கேள்விக்கு திரு மாத்தயா பதிலளிக்கையில் கூறியதாவது

ஜனாதிபதி பிரேமதாசாவுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் இப்பொழுது அடிப்படை முரண்பாடுகள் இல்லை. இந்திய இராணுவம் வெளியேற வேண்டுமென்பது இருதரப்பினரின் கருத்தாகும் தமிழர் பிரச்சனைக்கு இராணுவரீதியில் அல்லாது அரசியல்ரீதியில் தீர்வு காணப்பட வேண்டும் என்று இருதரப்பினரும் கருத்துக் கொண்டிருக்

(6ஆம் பக்கம் பார்க்க)

## கருணாநிதி மல்ஹோத்திரா சந்திப்பு

(கொழும்பு)

இலங்கையிலுள்ள இந்தியத் தூதுவர் திரு மல்ஹோத்திரா நேற்றுக் காலை கொழும்பிலிருந்து சென்னை வந்து தமிழக முதலமைச்சர்திரு.மு.கருணாநிதியைச் சந்தித்து பேசினார்.

சுமார் ஒன்றரை மணி நேரம் நடைபெற்ற இச் சந்திப்பின் போது இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கு தீர்வு காண்பது பற்றியும் தமிழ்ப் போராளிக் குழுக்களுக்குள் இடையே உள்ள முரண்பாடுகளை நீக்குவது குறித்தும் இருவரும் ஆலோசனை நடத்தினார்கள்.

## ஆனையிறவு தடைமுகாமில் சுங்க திணைக்களப் பிரிவு

(யாழ்ப்பாணம்)

பலவருடங்களின்பின் நாட்டில் நிலைமை சீரடைந்திருப்பதன் காரணத்தினால் ஆனையிறவு தடை-முகாம் இருந்த பகுதியில் ஓர் சுங்கத்திணைக்கள பிரிவு திறப்பதற்கான ஏற்பாடுகள் நடைபெற்றுவருகிறது.

இதற்கான முதற்கட்ட நடவடிக்கையாக கடந்தகால இராணுவ நடவடிக்கையின் போது சேதமடைந்த ஆனையிறவுசுங்கக்கட்டிடத்தை சத மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. ஏறக்குறைய இருபது லட்சம் ரூபா செலவீட்டிலேயே இக் கட்டிடத்தை மீண்டும் புனருத்தாரணம் செய்ய முடியும் என்றும் யாழ் சுங்கத் திணைக்கள பணிபபாளர் தெரிவித்துள்ளார். (லோ)

## திருகோணமலை நகரில் இருந்து படை வெளியேற்றம்

(திருகோணமலை)

திருகோணமலை நகரில் முகாமிட்டிருக்கும் இந்திய அமைதி காக்கும் படையினர் இம்மாதம் 10-ஆம் திகதியிலிருந்து வெளியேறத் தொடங்கி விடுவார்கள் என மேற்படி படை உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். திருகோணமலையில் சில காவல் நிலையங்களிலிருந்து இந்தியப் படை வெளியேறி உள்ளதாம் இவ் விடயங்களில் இலங்கைப் பொலிசார் சேவையில் ஈடுபட்டுள்ளனர். வங்கிகள், வடக்கு கிழக்கு மகாணசபை அலுவலகங்களிலும் இலங்கைப் பொலிசார் பாதுகாப்புச் சேவையில் ஈடுபடுத்தப் பட்டுள்ளார்கள் எனத் தெரியவருகின்றது.

## யாழ்நகரில் இன்று அஞ்சலி

(யாழ்ப்பாணம்)

மறைந்த மேஜர் காண்டீபனின் பூதவுடல் நேற்றிரவு நீர்வேலியில் பொதுமக்களின் அஞ்சலிக்காக வைக்ப்பட்டிருந்தது. ஆண்கள், பெண்கள் சிறுவர் சிறுமியர் உட்படப் பெருந்திரளானோர் அஞ்சலி செலுத்தினர். இன்று காலையிலிருந்து பிற்பகல் இரண்டு மணி வரை யாழ் நகரில் மனோகரா தியேட்டர் சந்திக்கருகேயுள்ள தமிழீழ விடுதலைப் புலிகளின் முகாமில் பொதுமக்களின் அஞ்சலிக்காக காண்டீபனின் பூதவுடல் வைக்கப்பட்டிருக்கும். பிற்பகல் இரண்டு மணியளவில் கண்டாவளைக்கு எடுத்துச் செல்லப்படும். மகாலிங்கம் காண்டீபனின் பூதவுடல் வெள்ளிக்கிழமை தகனம் செய்யப்படும்.

## முட்டை, முடிச்சுகளுடன் பெருமாள் தயார்!

### "கட்சி எங்கே போகச்சொல்கிறதோ அங்கே போவேன்" என்கிறார்

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு மாகாண சபையின் நிர்வாகம் குழம்பிக் கலைந்து விடும் நிலையில் உள்ளது. இந்திய இராணுவம் இலங்கையை விட்டுப் போகும் போது, தானும் அவர்களுடன் சேர்ந்து இந்தியாவுக்குப் போவதற்காக வட-கிழக்கு முன்னாள் முதலமைச்சர் வரதராஜப்பெருமாள் தனது பெட்டி படுக்கைகளைக் கட்டிக் கொண்டு தயார் நிலையில் இருப்பதாக திருகோணமலை அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இந்திய இராணுவத்துடன் சேர்ந்து நீங்களும் இந்தியா போகிறீர்களா? என்று வரதரை ஒருவர் கேட்டபோது, எனது கட்சியின் தீர்மானப்

(6ஆம் பக்கம் பார்க்க)

## ஈழப்பிரகடனத்துக்கு முஸ்லிம் லீக் கண்டனம்!

(கொழும்பு)

ஈழப்பிரகடனம்பற்றி அகில இலங்கை முஸ்லிம் லீக் அறிக்கையொன்றைவிடுத்துள்ளது.

நாட்டின் இறமை, ஒற்றுமை, ஒருமைப்பாடு ஆகியவற்றை முஸ்லிம் லீக் ஆத

(6ஆம் பக்கம் பார்க்க)



டார் சைக்கிளில் இருந்த போது மிக வேகமாக வந்த மினிவானினால் மோதுண்ட

வில்லை உடனடியாக கொழும்புக்கு கொண்டுசெல்ல முயற்சிகள் எடுக்கப்பட்டன, ஆயினும் அவரது உடல்நிலை பயணத்திற்கு ஏதுவாக இருக்கவில்லை.

மேஜர் காண்டீபனுக்கு இருபது வயதாகும். இவர் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியின் பழைய மாணவராவார்.இவர் நாவற்குழியில் வெடிவிபத்தில் இறந்ததென்மராட்சிப் பொறுப்பாளர் மேஜர் கேடில்ஸ்சின் சகோதரராவார் என்பது குறிப்பிடத்தக்கது. அத்தோடு இவர் இந்திய இராணுவத்

டீபன் சிறிது காலம் யாழ் நகரப் பொறுப்பாளராகவும் கடமையாற்றினார்.

## வெல்வேரி முகாம் மூடப்பட்டது

(திருகோணமலை)

திருமலையில் வெல்வேரி என்ற என்ற இடத்திலிருந்த இந்திய இராணுவ முகாம் நேற்று முன்தினம் மூடப்பட்டதாகத் தெரிய வருகிறது.

(6 ஆம் பக்கம் பார்க்க)

# யாழ். குடாநாடு சோகமயம்; காண்டீபனுக்கு இறுதி அஞ்சலி!

## ஹர்த்தால் இல்லை; இன்று துக்கதினம்!

(யாழ்ப்பாணம்)

நேற்று மரணமடைந்த மேஜர் காண்டீபனுக்கு அஞ்சலி செலுத்தும் முகமாக யாழ் குடாநாடு எங்கிலும் சோகமே உருவான தொரு நிலை காணப்படுகின்றது. இரண்டு வருடங்களின் பின்னர் பொதுமக்கள் தாமாக முன்வந்து அஞ்சலி செலுத்தும் காரியங்களில் ஈடுபடுவதை காணக்கூடியதாக உள்ளது.

மேஜர் காண்டீபன் இறந்த துயரச் செய்தி கேள்விபபட்டதும் கடைகள் யாவும் மூடப்பட்டன. கடைகளின் வாசல்களில் கறுப்புக் கொடிகள் தொங்கவிடப்பட்டன.

குடாநாடு எங்கும் மக்கள் வீதிகளில் கறுப்புக் கொடிகளைப் பறக்க விட்டனர். அண்மையில் குடாநாடு எங்கும் பறந்து கொண்டிருந்த புலிக்கொடிகள் அரைக்கம்பத்தில் தொங்க விடப்பட்டன. வாழை, தென்னை, கமுகு மரங்கள் வீதிகளில் நாட்டப் பட்டன. தென்னங்குருத்துத் தோரணங்கள் வீதியெங்கும் கட்டப்பட்டன.

சந்திகள் எங்கும் ஒலிபெருக்கிகள் சோகசீதத்தைஇசைத்த வண்ணமிருந்தன.

அதேவேளை மேஜர் காண்டீபனின் உடல் அஞ்சலி செலுத்துவதற்காக பெரும் திரளான மக்கள் விடுதலைப் புலிகளின் காங்கேசன்துறை வீதியிலுள்ள காரியாலயத்திற்கு முன்னால் கூடிய வண்ணமாகவுள்ளனர்.

அதேவேளை இன்றைய தினத்தை ஓர் துக்கதினமாக அனுஸ்டிக்குமாறு கோரியுள்ள விடுதலைப்புலிகளின் அரசியல் பொறுப்பாளர் திரு.டொமினிக் தாம் ஹர்த்தால் நடாத்தும்படி கோரவில்லை எனவும் தெரிவித்தார்.

## தேசிய விடுதலையுடன் பெண்கள் விடுதலையும்

(யாழ்ப்பாணம்)

தந்தைவழி சமூகத்தில் தோற்றம் கொண்ட பெண் ஒடுக்குமுறை இன்றும்தொடர்கின்றது. எனவே உரிமைகளை வென்றெடுப்பதற்காக உலகெங்கணும் பல பெண் விடுதலை இயக்கங்கள் இயங்கி வருகின்றன என தமிழீழ விடுதலைப் புலிகள் மகளிர் பிரிவினர் சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

மேலும் இவ் அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது, ஒரு சமத்துவமான சமுதாயத்தை உருவாக்கி நாட்டு மக்களின் சுபீட்சத்தைப் பெற்றுக் கொள்வதற்கான புரட்சிகரமான விடுதலைப் போராட்டங்களின் மூலம் ஆசிய நாடுகளில் பெண்கள் மீது திணிக்கப்பட்டுள்ள அடக்கு முறைகள் ஓரளவிற்கேனும் தளர்த்தப்பட்டுள்ளன. மேலும் அவ் அறிக்கையில் தமிழீழத்தில் பெண்கள் வாழ்வை சுபீட்சமானதாக்க தேசிய விடுதலையோடு இணைந்தே பெண் விடுதலையை வென்றெடுக்க வேண்டும். எனவே அனைத்துப் பெண்களும் எம்மோடு ஓரணியாக வேண்டும் எனவும் அவ் அறிக்கையில் குறிப்பிடப் பட்டுள்ளது.

## யாழ். இந்துக்கல்லூரி அதிபர் இடமாற்றம்

(யாழ்ப்பாணம்)

வடபகுதியில் தேசிய பாடசாலைகளில் ஒன்றான யாழ். இந்துக்கல்லூரியின் அதிபர் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். இவர் கொக்குவில் இந்துக்கல்லூரிக்கு அதிபராகச் செல்லும் அதே வேளை கொக்குவில் இந்துக்கல்லூரி அதிபர் யாழ். இந்துக்கல்லூரிக்கு மாற்றமாகியுள்ளார், இம் மாற்றங்கள் இம் மாதம் பதினைந்தாம் திகதியில் இருந்து செயற்பாட்டிற்கு வருகின்றது.

அதேவேளை யாழ். இந்துக்கல்லூரி அதிபரின்மாற்றத்தை ரத்துச் செய்யுமாறு மகாஜர்கள் கல்வித் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டிருப்பதாகவும் உத்தியோகபூர்வமற்ற செய்திகள் தெரிவிக்கின்றன.

யாழ். இந்துக்கல்லூரியின் நூற்றாண்டு விழா இவ்வருடம் நடைபெற இருப்பதும். அதற்கு முன்னோடி நடவடிக்கைகளில் மாற்றலாகிச் செல்லும் அதிபர் ஈடுபட்டிருந்ததும் குறிப்பிடத்தக்கது.

## வி.பி. சிங் ஜனாதிபதி சந்திப்பு

(புதுடில்லி)

காஷ்மீர் பிரச்சினை தொடர்பாக பாரதப் பிரதமர் திரு.வி.பி.சிங் ஜனாதிபதி ஆர். வெங்கட்ராமனை சந்தித்துப் பேசினார். சுமார் ஒரு மணி நேரம் இச்சந்திப்பு இடம் பெற்றது.

## வரிவிளம்பரம்

தூய வெள்ளை நிறமான மேசை உப்புத்தூள் (Table Salt) மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்பனைக்கு உண்டு. M. G. M. No. 777, K.K.S. Road. Jaffna. (B/66)

## விற்பனைக்கு

RAJZ BRAND எவசில்வர் பாத்திரங்கள் எங்கும் கிடைக்கும், உங்கள் விருப்பமே எங்கள் சேவை! பற்பல டிசைன்களில் பற்பல ரகங்கள்! சாப்பாட்டுப் பீங்கான்கள், செற் சட்டிகள், தாச்சிச் சட்டிகள், றேகள், சோஸ்பான்கள், பொரியல் சட்டிகள், டின்னர் செற்கள், ரீ செற்கள் கோவிற் சாமான்கள் இன்னும் பற்பல நம்பிக்கை நிதானம் RAJZ BRAND, பார்வை அறை S. A. தேவதாசன், சூராவத்தை, சுன்னாகம். (B-202)

### தேவை

அரிசி ஆலையில் வேலை செய்வதற்கு ஆட்கள் தேவை. சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும். உணவு தங்குமிட வசதி செய்து கொடுக்கபடும். K. S. R. K. மில்ஸ், G. P. S. லேன், கல்வியன்காடு. (B- 119)

Radio Tv, Air Conditioning-Refregeration வயறிங், வெல்டிங், வைன்டிங், Typing. Spoken English புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன. சிறந்த செய்முறை அறிமுறைப் பயிற்சிகளுடன் அங்கீகரிக்கப்பட்ட Diploma சான்றிதழ் வழங்கப்படும். Vispa Engineering Aid-Hall, 328, Navalar Road, Jaffna. (B-203)

### ரைப்பிங்

தமிழ்ரைப்பிங்ஆங்கில இலக்டோனக் ரைப்பிங் வேலைகளை சிரமமின்றி தெளிவாகவும் விரைவாகவும் செய்து முடிக்க சிறந்த ஸ்தாபனம் 'கிளீன் கட்'

### தேவை

பிளேட்டின் மெஷின் மைன்டர், கொம்பசிட்டர் வேவை நேரில் வரவும். மேலை பயில விரும்பும் இருபாலாரும் தேவை ஸ்ரீ வாணி அச்சகம் அச்சுவேலி.

### சும்மா கிடக்கிறதே!


# முப்பது நிறுவனங்கள் விரைவில் மூடப்படவுள்ளன

நாட்டிலுள்ள முப்பது நிதி நிறுவனங்கள் (பினான்ஸ் கம்பனிகள்) முறையாக இயங்கப்படாததால் பத்து மாதத்தில் மூடப்படவுள்ளதாக நிதி நிறுவனங்கள் மேற்பார்லைவப் பணிப்பாளர் டாக்டர் என். எல். சிரிசேனா தெரிவித்துள்ளார்.

சில நிதி நிறுவனங்கள் தமது ஆதாயத்தை மட்டுமே கருதுகின்றன. நாட்டில் உள்ள நிதி நிறுவனங்களில் சுமார் நூறு கோடி ரூபா முதலீடு செய்யப்பட்டுள்ளது. இதனைக் கொண்டு நாற்பத்தாறு குடும்பங்கள் மாத்திரமே சகல சுக போகங்களுடனும் வாழ்கின்றன.

பல நிதிநிறுவனங்கள் பதிவு செய்யப்படாமல் இயங்குகின்றன. பொதுமக்களும் பதிவு செய்யப்படாத நிறுவனங்களில் பணத்தைமுதலீடு செய்செய்துள்ளனர்.

சில நிதிக்கம்பனிகள் மூடப்பட்டு கம்பனிக்காரர் நாட்டைவிட்டே ஓடியுள்ளனர் அப்பாவி மக்கள் பணத்தை பறிகொடுத்து அவதியுறுகின்றனர்

ஒரு நிதி நிறுவனம் பதிவு செய்யப்படவேண்டுமானால் ஐம்பது லட்சம் ரூபாவை முதலீடாகவும் வைப்புப்பணமாகவும் செலுத்தவேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

# மீளக்குடியமர்த்தல் நிவாரணம்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை இலங்கை வங்கிக் கிளையில் எதிர்வரும் 10 ஆம் திகதி மீளக்குடியமர்த்தல் நிவாரணம் 1000 ரூபா வழங்கப்படும் விபரம்: முதலில் 1000 ரூபா பெற்றவர்களுக்கே தற்போது மீதி 1000 ரூபா வழங்கப்படுகின்றது.

| | |
|---|---|
| தொண்டமானாறு | 111 |
| தொண்டமானாறு | 24 |
| தொண்டமானாறு | 486 |
| வல்வெட்டித்துறை தெற்கு | 55 |
| வல்வெடடித்துறை தெற்கு | 184 |
| வல்வெட்டித்துறை தெற்கு | 572 |

தொடர்ந்தும் இக்கொடுப்பனவுகள் வங்கி விடுமுறை நாட்களில் வழங்கப்படுமென வங்கி முகாமையாளர் திரு. எஸ். மகாலிங்கம் தெரிவித்துள்ளார். (52)

# ஆலை ஊழியர்களுக்கு மீண்டும் விரைவில் வேலை

மல்லாகம் கிராம அபிவிருத்திச் ர்ங்கத்தின் மூலம் காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலையில் வேலைசெய்து 1983 இல் இடைநிறுத்தப்பட்ட ஊழியர்களுக்கு மீண்டும் வேலைவாய்ப்பிலும், நிரந்தர நியமனத்திலும் முன்னுரிமை கொடுக்க வேண்டும் என விடுத்த கோரிக்கையை சீமெந்துக் கூட்டுத்தாபன தலைவர் ஏற்றுக் கொண்டுள்ளார்.

இவர்கள் பற்றிய விபரங்களை தமக்கு அனுப்பிவைக்கும்படியும் அவர் மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்கத்தை கேட்டுள்ளார். இதனால் இந்த ஊழியர்கள் தம்முடன் தொடர்பு கொள்ளுமாறு இச்சங்கத்தலைவர் திரு. எஸ் ஸ்ரீ பாஸ்கரன் கேட்டுள்ளார்.

மேலும் இந்த ஊழியர்களுக்கு சம்பள நிர்ணய சபை தீர்மானித்த சம்பள சேர்வுப் பணம் வழங்கப்படாதையிட்டு இச்சங்கத்தலைவர் 'ஓம்புட்ஸ்மன்' முன்ப முறைய்யிட்டதையடுத்து கூட்டுத்தாபத்தை ஒரு மாத காலத்தில் இப்பணத்தை செத்துமாறு பணிப்புரை வழங்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் தமிழ் சிங்கள புத்தாண்டிற்கு முன்பு இச்சகக ஊமியர்களுக்கு சம்பள சேர்வுப்பணம், சேமலாபநிதி, நம்பிக்கை நிதியம் என்பன வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. ஆனால் நீதிமன்றம் எரிக்கப்பட்டதால் ஒம்புட்ஸ்மன் முன்பாக முறையிடப்பட்டது.

# பாராட்டு விழா

ஸ்ரீ சணேசானந்த மகாதேவ சுவாமி அவர்களுக்கு தென்மராட்சி திவ்ய ஜீவன சங்கம் திரு. நா. முத்தையா தலைமையில் பாராட்டுவிழா ஒன்றை 18-ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை நடாத்த உள்ளது.

அன்று காலை 8 மணிக்கு சாவகச்சேரி உழுத்தம்புலம் பிள்ளையார் கோயிலிலிருந்து ஆரம்பமாகும் பஜனைக் கோஷ்டி நடராஜ முருகன் கோயில், வீரபத்திரர் ஆலயம் மீனாட்சி அம்மன் கோயில்,


## மின்தறி நெசவாளர் தேவை

பிரபல்யமான மின்தறி ஆலைக்கு நெசவு வேலைசெய்ய பயிற்சிபெற்ற நெசவாளர் பெண்கள் தேவை. பயிலுனர்களும் விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி:

மே. / பா. ஈழநாதம் விளம்பர இல B 194
31, வைமன் வீதி,
யாழ்ப்பாணம்.

(B-194)

வளர்க ஈழநாதம்!

மெத்தைகள், சகல வாகன இருக்கைகள், செற்றி, ஸ்பிறிங் கட்டில்கள் உற்பத்தியும் பழுதடைந்தவைகளை திருத்தியும், சிங்கப்பூர் பஞ்சு மெத்தைகளும் குறித்த காலத்தில் செய்து கொடுக்கப்படும்.

## வள்ளி மணாளன் ஸ்ரோர்ஸ்

உடுப்பிட்டி றோட்,
தொண்டமானாறு.
உரிமையாளர்: கி. வடிவேல்
சான்றுப் பத்திர இல: 11534

(B201)


# ஆதீனத்தில் மனனப் போட்டி

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் தேவார மனனப் போட்டி ஒன்று எதிர் வரும் 17ஆம் திகதி தொடக்கம் 24-ம் திகதிவரையும் நடைபெறவுள்ளது. இப் போட்டியில் பங்குபற்றுவோர் 29-4-90 இல் 18 வயதுக்கு உட்பட்டவராயிருத்தல் வேண்டும்.

கீழ்க் குறிப்பிடப்படும் பத்துத் திருப்பதிகங்களை மனனம் செய்து ஒப்புவிப்போர் ஒவ்வொருவருக்கும் பரிசில்களும் ஆதீனச் சான்றிதழ்களும் வழங்கப்படும்.

மனனம் செய்யவேண்டிய பதிகங்கள் வருமாறு,

திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார், திருநீற்றுப் பதிகம், பஞ்சாங்கப் பதிகம், நமச்சிவாயப் பதிகம், கோளறு பதிகம், திருநீலகண்டப் பதிகம், பொற்கிளி பெற்ற பதிகம், திருக்கேதீச்சரப் பதிகம், திருநாவுக்கரசு நாயனார் நமச்சிவாயப் பதிகம், மறுமாற்றுத் திருத்தாண்டகம், சுந்தரமூர்த்திநாயனார் நமச்சிவாயப் பதிகம்.

முன்னைய வருடங்களில் நடைபெற்ற மனனப் போட்டிகளில் பரிசு பெற்றோர் ஆதீனம் குறிப்பிடும் வேறு பதிகங்களை மனனம் செய்தல் வேண்டும்.

விண்ணப்பங்களை 1-4-90 க்குமுன் ஆதீனத்தில் கிடைக்கத்தக்கதாக அனுப்பவேண்டும் எனத் தெரிவிக்கப்படுகிறது,


## இன்றைய சினிமா

75 வது நாளாக!!
நியூ சாந்தி (யாழ்)
தினசரி 10.30, 2.30, 6.30
சூப்பர் ஸ்ரார்'
ரஜனி - அமலா நடித்த
**கொடி பறக்குது**
(கலர்)

7 வது வாரம்
மனோகரா - (யாழ்)
தினசரி 10. 30, 2.30, 6.3
ரஜனி, ரூபினி. நடித்த
**மனிதன்**
(கலர்)

ஜனத்திரள் காட்சிகள்
ஹரன் யாழ்.
10-30 2-30 6-30
கமலஹாசன்
சரண்யா நடித்த

## ஈழநாதம் பத்திரிகையே!

உன் இனிய செய்திகளை நாம் தினமும் படிக்கும் போது எமது நெஞ்சு பூரிப்படைகின்றது. ஏனெனில் தினமும் பிந்திய செய்திகளை உடனுக்குடன் வாசகர்களுக்கு தருகின்றாயே! உன் வீரத்தை நாம் பாராட்டாமல் இருக்க முடியாது. இரண்டாயிரம் ஆண்டுகள் ஓடி மறைந்தாலும் உன் ஈழநாதம் மறையப்பபாது.

MORAIS

Diploma சான்றிதழ் வழங்கப் படும். Vispa Engineering Aid-Hall, 328, Navalar Road, Jaffna. (B-203)

### ரைப்பிங்

தமிழ்ரைப்பிங்ஆங்கில இலக்டோனக் ரைப்பிங் வேலைகளை சிரமமின்றி தெளிவாகவும் விரைவாகவும் செய்து முடிக்க சிறந்த ஸ்தாபனம் 'கிளீன் கட்'

### தேவை

பிளேட்டின் மெஷின் மைன்டர், கொம்பசிட்டர் வேவை நேரில் வரவும். மேலை பயில விரும்பும் இருபாலாரும் தேவை ஸ்ரீ வாணி அச்சகம் அச்சுவேலி.

### சும்மா கிடக்கிறதே!

(சுழிபுரம்)

இந்திய அமைதி காக்கும் இராணுவம் முகாமிடுவதற்காக சுவீகரித்த சுழிபுர்ம் பிரதேச சபையின் நூல்நிலையக் கட்டிடமும் இலவச ஆயுள்வேத வைத்திய நிலையக் கட்டிடமும் தற்போது வெறுமனே கிளக்கிறது. பிரதேச சபை மேற்படி நூல் நிலையத்தையும், ஆயுள்வேத வைத்திய நிலையத்தையும், மக்கள் வரிப்பணத்தில் வாடகைக்கு எடுத்து தொடர்ந்து நடாத்துவது குறித்து இப்பகுதி மக்கள் அதிருப்தி தெரிவிக்கின்றனர். (17)

### விளையாட்டுப் போட்டி

( கரவெட்டி )

நெல்லியடி மெதடிஸமிஷன் தமிழ் கலவன் பாடசாலையின வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி எதிர்வரும் வெள்விக்கிழமை பி. ப. 2 மணியளவில் நடைபெறவுள்ளது.

பாடசாலை விளையாட்டு மைதானத்தில் நடைபெறும் இவ்வைபவத்திற்கு பாடசாலை அதிபர் திரு. எஸ். வேலாயுதம் தலைமை வகிப்பார்.

சங்கத்தலைவர் திரு. எஸ் ஸ்ரீ பாஸ்கரன் கேட்டுள்ளார்.

மேலும் இந்த ஊழியர்களுக்கு சம்பள நிர்ணய சபை தீர்மானித்த சம்பள சேர்வுப் பணம் வழங்கப்படாதையிட்டு இச்சங்கத்தலைவர் 'ஓம்புட்ஸ்

### பாராட்டு விழா

ஸ்ரீ சணேசானந்த மகாதேவ சுவாமி அவர்களுக்கு தென்மராட்சி திவ்ய ஜீவன சங்கம் திரு. நா. முத்தையா தலைமையில் பாராட்டுவிழா ஒன்றை 18-ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை நடாத்த உள்ளது.

அன்று காலை 8 மணிக்கு சாவகச்சேரி உழுத்சம்புலம் பிள்ளையார் கோயிலிலிருந்து ஆரம்பமாகும் பஜனைக் கோஷ்டி நடராஜ முருகன் கோயில், வீரபத்திரர் ஆலயம் மீனாட்சி அம்மன் கோயில், இத்தியடிப் பிள்ளையார் கோயில் வழியாக பெரிய மாவடி கந்தசுவாமிகோயிலை சென்றடைந்தபின் இப்பாராட்டுவிழா வைபவம் நடைபெறும்.

### போட்டி முடிவுகள்

(கரவெட்டி)

கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் பிரிவு விளையாட்டுக் கழகங்களுக்கிடையேயான கரப்பந்தாட்ட, வலைப்பந்தாட்டப் போட்டிகளின் முறையே ஈ.ஜி.சி விளையாட்டுக்கழகமும், பெம்பேஸ்விளையாட்டுக் கழகமும் வெற்றி பெற்றுள்ளன. (18)

### பொங்கல் விழா

(சுழிபுரம்)

சுழிபுரம் பத்ரகாளி அம்பாள் ஆலயவருடாந்த பொங்கல் திருவிழா இம்மாதம் 20 ஆம்திகதிசெவ்வாய்க் கிழமை விளக்கேற்றுதலுடன் ஆரம்பமாகி 27ஆம் திகதி முதலாம் பொங்கலும் ஏப்பிரல்3ம்திகதி எட்டாம் மடை வைபவமும் நடைபெறவுள்ளது. (17)


## ஈழநாதம் பத்திரிகையே!

உன் இனிய செய்திகளை நாம் தினமும் படிக்கும் போது எமது நெஞ்சு பூரிப்படைகின்றது. ஏனெனில் தினமும் பிந்திய செய்திகளை உடனுக்குடன் வாசகர்களுக்கு தருகின்றாயே! உன் வீரத்தை நாம் பாராட்டாமல் இருக்க முடியாது. இரண்டாயிரம் ஆண்டுகள் ஓடி மறைந்தாலும் உன் ஈழநாதம் மறையப்படாது.

# MORAIS

**OPTICIAN & DENTAL TECHNICIANS**
**50, CLOCK TOWER ROAD,**
(OPPOSITE OF WELLINGTON THEATRE
**JAFFNA.**

◎ கண் பரிசோதித்து, குறுகிய நேரத்தில் கண்ணாடி கொடுப்பவர்கள்.

◎ பல்கட்டும் நிபுணர்கள்

மறவாதீர்கள்

யாழ்நகரில் வெலிங்டன் தியேட்டர் முன்பாக உங்களுக்கு சேவை செய்யக் காத்திருக்கும்

## மொறாய்ஸ்

இல 50, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

B - 204

75 வது நாளாக!!
**நியூ சாந்தி (யாழ்)**
தினசரி 10.30, 2.30, 6.30
சூப்பர் ஸ்ரார்'
ரஜனி - அமலா நடித்த
**கொடி பறக்குது**
(கலர்)

7 வது வாரம்
**மனோகரா - (யாழ்)**
தினசரி 10. 30, 2.30, 6.3
ரஜனி, ரூபினி. நடித்த
**மனிதன்**
(கலர்)

ஜனத்திரள் காட்சிகள்
**ஹரன் யாழ்.**
10-30 2-30 6-30
கமலஹாசன்
சரண்யா நடித்த
**நாயகன்**
(சலர்)

**லிடோ (யாழ்)**
10. 30, 2. 30, 6. 30
★ பிரபு ★ சரிதா
**பூ- பூவா பூத்திருக்கு**
(கலர்)

**ராஜா (யாழ்)**
10. 30, 2. 30, 6. 30
ரஜனி (இரு வேடம்)
ராதா, நதியா
**ராஜாதி ராஜா**
(கலர்)

12ஆவது வாரம்
**வெலிங்டன் (யாழ்)**
தினசரி
10. 30, 2. 30 6. 30
★ கார்த்திக் ★ குஷ்பு
**வருஷம் 16**
(கலர்)

**ஸ்ரீதர் (யாழ்)**
10. 30, 2. 30, 6. 30
கமலஹாசன் -- சுஜாதா
**அவள் ஒரு தொடர்கதை**

# க. செ. கைலாசம்பிள்ளை அன் சன்ஸ்

ஆயுள்வேத மருந்துகள், எண்ணைகள், வாசனைப் பொருட்கள் தயாரிப்பவர்கள்.
மருந்து வியாபாரிகளும் கமிஷன் ஏஜன்ட்டுகளும்
ஆயுள்வேத மருந்துகளும் மூலிகைகளும் இறக்குமதி செய்வோர்

76. பெரியகடை வீதி,
யாழ்ப்பாணம். (B 187)

# ஆப்கானிஸ்தானில் திடீர் புரட்சி முறியடிப்பு; தாக்குதலில் பொதுமக்கள் பலர் பலி!

## உள்துறை அமைச்சரிடம் பாதுகாப்பும் ஒப்படைப்பு

(காபூல்)

ஆப்கானிஸ்தானில் பாதுகாப்புத்துறைஅமைச்சரினால் மேற்கொள்ளப்பட்டஅரசியல் கவிழ்ப்பு முயற்சி முறியடிக்கப் பட்டிருப்பதாக அங்கிருந்து வரும் செய்திகள் கூறுகின்றன. இது பற்றி மேலும் கூறப்படுவதாவது பாதுகாப்புத்துறை அமைச்சர் சேர் முபாரக்கினால் மேற்கொள்ளப்பட்ட அரசியல் கவிழ்ப்பு முயற்சி முறியடிக்கப் பட்டிருப்பதாக அதிபர் நஜீப் கூறியிருக்கிறார். கிளர்ச்சியாளர்களினால் கைப்பற்ற முயன்ற பாதுகாப்பு அமைச்சக கட்டிடத்தை தமது படையினர் மீட்டு விட்டனர் என்றும்,அவர்கள் கைது செய்யப்பட்டனர் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இக்கிளர்ச்சிக்கு தலைமை வகித்த ஜெனரல் கனய் தப்பிச் சென்று விட்டதாகக் கூறப்படுகின்றது. தலைநகர் வீதிகளில் பல மணிநேர சண்டைக்குப் பின்னர் அதிபர் நஜிமுல்லாவினால் கிளர்ச்சி அடக்கப்பட்டுவிட்டதாக அறிக்கை விடப்பட்டது. சண்டைகள் முடிந்து விட்டதா என்பது பற்றி நிச்சயமாகத் தெரியவில்லை. ஏனெனில் காபூலுடன் அநேகமாக எல்லாத் தொடர்புகளும் துண்டிக்கப் பட்டு விட்டன. ஆனால் சோவியத் யூனியனின் செய்தி ஏஜென்சியான டாஸ்ஆப்கான் அரசு இந்தப் புரட்சியை முறியடித்து விட்டதாக தெரிவிக்கிறது.

அதேவேளைகிளர்ச்சியாளர்கள் மேற் கொண்ட விமானம் பீரங்கிப்படைத் தாக்குதல்களில் பல பொதுமக்கள் இறந்தனர் எனவும் அச்செய்தி கூறுகிறது.

காபூலில் ஊரடங்கு உத்தரவுபிறப்பிக்கப்பட்டிருக்கிறது இப்போதைய உள்துறை அமைச்சர் மொகமட் அஸ்லம் தற்காலிக பாதுகாப்பு அமைச்சராக அதிபர் நஜிப்பினால் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

## வி. பி. சிங் - ராஜீவ் பரஸ்பர குற்றச்சாட்டு

### காஷ்மீர் பிரச்சினை தீவிரமடைய யார் காரணம்

காஷ்மீர் பிரச்சினை தொடர்பாக காங்கிரஸ் கட்சித் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான ராஜீவ் காந்தி பிரதமமந்திரி வி. பி. சிங்கிற்கு கடிதம் ஒன்றை அனுப்பி உள்ளார். இக்கடிதத்தில் தான் இன்னும் சிலதினங்களில் காஷ்மீருக்குச் செல்ல இருப்பது பற்றியும், காஷ்மீரில் நிலவும் நெருக்கடிகள் பற்றியும் குறிப்பிட்டிருக்கிறார். மேலும் இவர் குறிப்பிடுகையில் காஷ்மீர் நெருக்கடிக்குதீர்வுகாண மீண்டும் புதிய முயற்சிகளைத் தொடங்குமாறும், காஷ்மீர் பற்றி ஆர்வம் கொண்டுள்ள பாதுகாப்பு கொண்ட கட்சிகள் இனிமேலும் வாளாது இருக்காது என்றும் நிலைமையை இனியும் மோசமாக ஆக்க முடியாது என்றும் குறிப்பிட்டிருக்கிறார். அத்துடன் காஷ்மீரில் கடந்த 42 வருட கால வரலாற்றில் காணமுடியாத நிலைமை இப்போது ஏற்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார். தாங்கள் காஷ்மீரில் பாருக் அப்துல்லாவின் தேசிய மகாநாட்டுக் கட்சியுடன் இணைந்து கூட்டணி அரசை அங்கு அமைத்து மக்களுடன் நெருக்கமான தொடர்பை வைத்திருந்ததாகவும் அத்துடன் அரசியல் அடக்குமுறை எதிலும் ஈடுபடவில்லை என்றும் ஆதலால் அப்போது பிரச்சினைகள் இறுக்கமடையவில்லை என்றும் கூறினார்.

இதற்கிடையில் பாருக் அப்துல்லாவின் திறமையற்ற ஆட்சியும் அவர் காலத்தில் நீண்ட காலமாக கூட்டப்படாத அமைச்சரவையும்தான் இன்றைய காஷ்மீர் பிரச்சினை இறுக்மடைய காரணம்என்று விபி.சிங். குறிப்பிட்டிருக் கிறார்

இதற்கிடையில் பிரதமர் வி பி சிங் அவர்கள் பல கட்சிகளின் தலைவர்களையும் சந்தித்து, காஷ்மீர் விவகாரம் பற்றி விவாதித்து வருகிறார். பாரதீய ஜனதாக் கட்சி தலைவர் வாஜ்பேய், இரண்டு கம்யூனிஸ்ட் கட்சி தலைவர்களுடனும் கலந்துரையாடினார்.

காஷ்மீரில் நடந்த வன்முறையில் மேலும் ஆறு பேர் கொல்லப்பட்டனர். ஸ்ரீ நகரில் எட்டு இடங்களில் தீவிரவாதிகள் வெடிகுண்டுகள் வைத்து தாக்கினர். ஊரடங்கு உத்தரவு தளர்த்தப் பட்ட பின்னர் இவ்வன்முறைகள் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. மேலும் முஸ்லீம் தீவிரவாதிகள் தாக்கியதில் 9 பொலிசார் மாண்டனர். இதன் எதிரொலியாக பாதுகாப்புப் படையினர் 50 வலதுசாரி முஸ்லீம் தீவிரவாதிகளைக் கைது செய்துள்ளது. இதனையும் சேர்த்து கடந்த நான்கு நாட்களில் கைது செய்தவர்களின் எண்ணிக்கை 200 ஆக உயர்ந்து விட்டது. இது ஒருபுறமிருக்க காஷ்மீர் பள்ளத்தாக்கில் இருந்து இந்துக்கள் குடிபெயர்ந்த வண்ணம் இருக்கிறார்கள்.

அதேவேளை இந்தியப் பிரதம மந்திரி வி. பி. சிங்கை காங்கிரஸ் கட்சித் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான ராஜீவ் காந்தி செவ்வாய்க்கிழமை இரவு சந்தித்துப் பேசினார். இவர்களது பேச்சுக்கள் இன்று காஷ்மீரில் நடைபெறும் கலவரங்கள் பற்றியதாகவே இருந்ததாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. மேலும் இச்சந்திப்பில் காஷ்மீர் பள்ளத்தாக்கில் நிலைமையை இயல்பாக்க மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளில் தேசிய பொதுக்கருத்து எட்டப்பட வேண்டியதன் அவசியம் அப்போது வலியுறுத்தப்பட்டது.

மேலும் இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதில் தமது கட்சி முழு ஒத்துழைப்பையும் தரும் என்று உறுதியளித்தார்.

## மல்லிகை வெள்ளிவிழா மலர் சனிக்கிழமை வெளியீட்டுவிழா

மல்லிகை வெள்ளி விழா மலர் வெளியீட்டு விழா பத்தாம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு நாவலா மண்டபத்தில் திரு. தெளிவத்தை யோசப் தலைமையில் நடைபெறவுள்ளது.

வரதர், யாழ். மாநகர ஆணையாளர் திரு. பொ. பாலசிங்கம், உதவி உள்ளூராட்சி ஆணையாளர் திரு. எஸ். டிவகலால, திரு. வ. இராசையா (தகவம்) திரு. பூ. ஸ்ரீதரசிங் ஆகியோர் மங்கல விளக்கேற்றுவர்.

திரு. அ. சோமசுந்தரம் பிள்ளை, திரு. எஸ். கே. மனோகரபூபன், திருமதி சுதாராஜ் ஆகியோர் முதற் பிரதியைப்பெறுவர்.

டாக்டர் எம். கே. முருகானந்தன், வண. பிதா நேசநாயகம், திக்குவல்லைக் கமால், மேமன்கவி, திரு. இ. ஜெயராஜ் ஆகியோர் கருத்துரை வழங்குவார்கள்.

திரு. கா. சந்திரசேகரம், சம்பந்தன், திரு ச. முத்துக்குமாரு, திரு. த. கலாமணி, திரு. ந. இராசரட்ணம், திரு. இரா.சிவச்சந்திரன் ஆகியோர் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்படுவர்.

## பணமாக செலுத்தலாம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தில் காப்புறுதிக் கட்டணம் செலுத்துவோர் இன்றுமுதல் பணமாகவே செலுத்தலாம் என்று காப்புறுதிக் கூட்டுத்தாபனம் தொடர்பான அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

தற்போது வாகன காப்புறுதி கட்டணங்கள் உட்பட அனைத்து பொதுக் காப்புறுதி கட்டணங்களையும் மக்கள் இவ்வலுவலகத்தில் செலுத்தி வருகின்றனர் என்றும் அவர் தெரிவித்துள்

## கழகங்களுக்கு இடையில் விளையாட்டுப் போட்டி

(கரவெட்டி)

கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் பதிவு செய்

## காணிப்பதிவேடுகள் கிளிநொச்சிக்கு மாற்றம்

(சுகமலை)

கிளிநொச்சி மாவட்ட காணி, பிறப்பு, இறப்பு, திரு

ஏடுகளும் காணிப்பதிவு சம்பந்தமாக பச்சிலைப்பள்ளி 'B' கரைச்சி 'L' பூநகரி 'G'

## தென்னாபிரிக்காவை மீண்டும் ஒலிம்பிக்கில் சேர்க்க முயற்சி

தென்னாபிரிக்காவை மீண்டும் ஒலிம்பிக்கில் சேர்த்துக் கொள்வதுபற்றி சர்வதேச ஒலிம்பிக் சங்கம் ஆராய்கிறது.

1970-இல் சர்வதேச ஒலிம்பிக் சங்கம் தென் ஆபிரிக்காவை இந்த அமைப்பிலிருந்து வெளியேற்றியது. தென்னாபிரிக்காமீது முதன் முதலாக தடைவிதித்ததும் இச்சங்கமே.

தென்னாபிரிக்காவில் இன ஒதுக்கல் கொள்கைகளில் மாற்றம் ஏற்பட ஆரம்பத்திருப்பதாலேயே இந்த நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

அடுத்தமாதம் 21-ஆம்திகதி சுவற்சலாந்தில் உள்ள ஒலிம்பிக் தலைமை அலுவலகத்தில் நடைபெறும் மாநாட்டிலும் இது குறித்து ஆராயப்பட உள்ளது.

இது தொடர்பாக ஆபிரிக்காவிலுள்ள வெள்ளையின, கறுப்பின விளையாட்டு அமைப்புகளின் கருத்து திரட்டப்படும்.

## ஈச்சமோட்டை வீதியில் அபாய நிலையில் மின்கம்பம்

(யாழ்ப்பாணம்)

ஈச்சமோட்டை வீதியில் முதலாவது ஒழுங்கை சந்தியில் அமைந்துள்ளமின்கம்பம் எந்த நேரத்திலும் முறிந்துவிழும் அபாய நிலையில் உள்ளது.

பெரும் மழை, காற்று ஏற்பட்டால் இது விழக்கூடிய நிலையில் சரிந்தும், அதன் அடிப்பாகம் உடைந்து வெடித்துள்ளதுடன் உள்ளே கம்பிகளும் துருப்பிடித்த நிலையில் காணப்படுகின்றன.

இது குறித்து சம்பந்தப்பட்டவர்களுக்கு இப்பகுதிமக்கள் புகாரிட்டபோது நாலாபக்கமும் மின்கம்பங்கள் பொருத்தப் பட்டுள்ளதால் தற்போதைக்கு விழமாட்டாது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இந்த ஒழுங்கையும் இரவுநேரம் இருளில் மூழ்கியுள்ளது.

## யாழ். இந்துவை ஷப்றா 7 விக்கட்டுகளால் வென்றது

(யாழ். விளையாட்டு நிருபர்)

யாழ். இந்துக்கல்லூரிக்கும் ஷப்றா அணிக்குமிடையில் நடைபெற்றகிரிக்கெட் போட்டியில் ஷப்றாஅணி 7 விக்கெட்டுகளால் வெற்றியீட்டியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ். இந்துக் கல்லூரி 146 ஓட்டங்களைப் பெத்றது. ஜெயராஜ் 55, நரேந்திரன் 46 ஓட்டங்களைப் பெற்றனர். நித்தியராஜன் 5 விக்கட்டுகளையும் இளங்கோ 3 விக்கெட்டுக்களையும் கைப்பற்னார்கள்,

ஷப்றா அணி தனது முதலாவது ஆட்டத்தில் 174 ஓட்டங்களைப் பெற்றது. பத்மஜெயந் 39, விஜயகுமார் 23, முருகவேல் 21, குலசிங்கம் 21, வீரசிங்கம் 17, ஜெயந்தன் 12, சண்முகலிங்கம் 12 ஓட்டங்களைப் பெற்றனர். நரேந்திரன் 7 விக்கெட்டுகளைக் கைப்பற்றினார்.

யாழ். இந்து தனது 2-வது இன்னிங்சில் 3 விக்கெட்டுக்களை இழந்து 148 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஆட்டத்தை நிறுத்திக்கொண்டது. ஷப்றா அணி 10 ஓவர்களில் 121 ஓட்டங்களை எடுக்கும் நிலையில் விளையாட்டை ஆரம்பித்தது.

யாழ். இந்துக் கல்லூரியின் பெருந்தன்மைக்கு கிரிக்கெட் ரசிகர்கள் பலர் பாராட்டுக்களைத் தெரிவித்தனர்.

யாழ். இந்து தனது இரண்டாவது இன்னிங்சில் வேகமாக 64 ஓட்டங்களை ஆட்டமிழக்கமல் பெற்றனர், ராஜசேகர் ஆட்டமிழக்காமல் 49 ஓட்டங்களையும், கோபிராஜ் 21 ஓட்டங்களையும் பெற்றனர்,

ஷப்றா அணியினர் 9.4 ஓவர்களில் 3 விக்கெட்டுகளை இழந்து 126 ஓட்டங்களை எடுத்துள்ளார். சராசரி ஒரு ஓவரில் 14 ஓட்டங்கள் பெற்றுள்ளனர். இது ஓர் சாதனையாக கிரிக்கெட் ரசிகர்கள் கணிக்கிறார்கள். ஷப்றா அணியின் வெற்றியை வித்தியாதரன் ஆட்டமிழக்காமல் மின்னல் வேகத்தில் 66 ஓட்டங்களையும் பத்மஜெயந் 28 ஓட்டங்களையும் விஜயகு

## குளிர்த்தி

கைதடி வடக்கு புதராயர்

லா மண்டபத்தில் திரு. தெளிவத்தை யோசப் தலைமையில் நடைபெறவுள்ளது.

எஸ். டிவகலால, திரு. வ. இராசையா (தகவம்) திரு. பூ. ஸ்ரீதரசிங் ஆகியோர் மங்கல விளக்கேற்றுவர்.

திரு. அ. சோமசுந்தரம் பிள்ளை, திரு. எஸ். கே. மனோகரபூபன், திருமதி சுதாராஜ் ஆகியோர் முதற் பிரதியைப்பெறுவர்.

டாக்டர் எம். கே. முருகானந்தன், வண. பிதா நேசநாயகம், திக்குவல்லைக் கமால், மேமன்கவி, திரு. இ. ஜெயராஜ் ஆகியோர் கருத்துரை வழங்குவார்கள்.

திரு. கா. சந்திரசேகரம், சம்பந்தன், திரு ச. முத்துக்குமாரு, திரு. த. கலாமணி, திரு. ந. இராசரட்ணம், திரு. இரா. சிவச்சந்திரன் ஆகியோர் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்படுவர்.

## பணமாக செலுத்தலாம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தில் காப்புறுதிக் கட்டணம் செலுத்துவோர் இன்றுமுதல் பணமாகவே செலுத்தலாம் என்று காப்புறுதிக் கூட்டுத்தாபனம் தொடர்பான அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

தற்போது வாகன காப்புறுதி கட்டணங்கள் உட்பட அனைத்து பொதுக் காப்புறுதி கட்டணங்களையும் மக்கள் இவ்வலுவலகத்தில் செலுத்தி வருகின்றனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (லோ)

டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார். தாங்கள் காஷ்மீரில் பாருக் அப்துல்லாவின் தேசிய மகாநாட்டுக் கட்சியுடன் இணைந்து கூட்டணி அரசை அங்கு அமைத்து மக்களுடன் நெருக்கமான தொடர்பை வைத்திருந்ததாகவும் அத்துடன் அரசியல் அடக்குமுறை எதிலும் ஈடுபடவில்லை என்றும் ஆதலால் அப்போது பிரச்சினைகள் இறுக்கமடையவில்லை என்றும் கூறினார்.

இதற்கிடையில் பாருக் அப்துல்லாவின் திறமையற்ற

முறையில் மேலும் ஆறு பேர் சொல்லப்பட்டனர். ஸ்ரீநகரில் எட்டு இடங்களில் தீவிரவாதிகள் வெடிகுண்டுகள் வைத்து தாக்கினர். ஊரடங்கு உத்தரவு தளர்த்தப்பட்ட பின்னர் இவ்வன்முறைகள் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. மேலும் முஸ்லீம் தீவிரவாதிகள் தாக்கியதில் 9 பொலிசார் மாண்டனர். இதன் எதிரொலியாக பாதுகாப்புப் படையினர் 50 வலதுசாரி முஸ்லீம் தீவிரவாதிகளைக் கைது செய்துள்

பற்றியதாகவே இருந்ததாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. மேலும் இச்சந்திப்பில் காஷ்மீர் பள்ளத்தாக்கில் நிலைமையை இயல்பாக்க மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளில் தேசிய பொதுக்கருத்து எட்டப்பட வேண்டியதன் அவசியம் அப்போது வலியுறுத்தப்பட்டது.

மேலும் இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதில் தமது கட்சி முழு ஒத்துழைப்பையும் தரும் என்று உறுதியளித்தார்.

டிய யாழ். இந்துக் கல்லூரி 146 ஓட்டங்களைப் பெற்றது. ஜெயராஜ் 55, நரேந்திரன் 46 ஓட்டங்களைப் பெற்றனர். நித்தியராஜன் 5 விக்கட்டுகளையும் இளங்கோ 3 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினார்கள்,

ஷப்றா அணி தனது முதலாவது ஆட்டத்தில் 174 ஓட்டங்களைப் பெற்றது. பத்மஜெயந் 39, விஜயகுமார் 23, முருகவேல் 21, குலசிங்கம் 21, வீரசிங்கம் 17, ஜெயந்தர் 12, சண்முகலிங்கம் 12 ஓட்டங்களைப் பெற்றனர். நரேந்திரன் 7 விக்கெட்டுகளைக் கைப்பற்றினார்.

யாழ். இந்து தனது 2-வது இன்னிங்சில் 3 விக்கெட்டுக்களை இழந்து 148 ஓட்டங்

ரசிகர்கள் பலர் பாராட்டுக்களைத் தெரிவித்தனர்.

யாழ். இந்து தனது இரண்டாவது இன்னிங்சில் வேகமாக 64 ஓட்டங்களை ஆட்டமிழக்கமல் பெற்றனர், ராஜசேகர் ஆட்டமிழக்காமல் 49 ஓட்டங்களையும், கோபிராஜ் 21 ஓட்டங்களையும் பெற்றனர்,

ஷப்றா அணியினர் 9.4 ஓவர்களில் 3 விக்கெட்டுகளை இழந்து 126 ஓட்டங்களை எடுத்துள்ளார். சராசரி ஒரு ஓவரில் 14 ஓட்டங்கள் பெற்றுள்ளனர். இது ஓர் சாதனையாக கிரிக்கெட் ரசிகர்கள் கணிக்கிறார்கள். ஷப்றா அணியின் வெற்றியை வித்தியாதரன் ஆட்டமிழக்காமல் மின்னல் வேகத்தில் 66 ஓட்டங்களையும் பத்மஜெயந் 28 ஓட்டங்களையும் விஜயகுமார் ஆட்டமிழக்காமல் 16 ஓட்டங்களை மிகவும் சிறந்த முறையில் பெற்று வாய்ப்பை உறுதி செய்தனர். 42

## கழகங்களுக்கு இடையில் விளையாட்டுப் போட்டி

(கரவெட்டி)

கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையேயான மெய்வல்லுநர் போட்டிகள் எதிர் வரும் சனி, ஞாயிற்க்றுகிழமைகளில் நடைபெறவுள்ளது.

நெல்லியடி மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ள இப்போட்டிகளுக்கு கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் திரு. இ. ஐயாத்துரை தலைமை வகிப்பார்.

இப்போட்டியில் சிறப்பு விருந்தினராக யாழ் மாவட்ட விளையாட்டுத் துறை அதிகாரி திரு. கே. ஏகாம்பரம் கலந்து கொள்வார். (18)

## காணிப்பதிவேடுகள் கிளிநொச்சிக்கு மாற்றம்

(சுகமலை)

கிளிநொச்சி மாவட்ட காணி, பிறப்பு, இறப்பு, திருமண பதிவுக் காரியாலயம் செயல்படத் தொடங்கியுள்ளது. இதுவரை காலமும் யாழ். மாவட்டத்துடன் இருந்த கிளிநொச்சிக்குரிய சகல பதிவேடுகளும் கடந்த சனிக்கிழமை அனுப்பப்பட்டு விட்டது. இதன்படி பளை, பரந்தன், முள்ளிப்பற்று, கிளிநொச்சி, கண்டாவளை, வட்டக்கச்சி, பூநகரி, பல்லவராயன்கட்டு ஆகிய பிரிவுகளுக்குரிய பிறப்பு, இறப்பு பதிவேடுகளும் பச்சிலைப்பள்ளி கரைச்சி, பூநகரி, ஆகிய பதிவுகளுக்குரிய திருமணப் பதிவேடுகளும் காணிப்பதிவு சம்பந்தமாக பச்சிலைப்பள்ளி 'B' கரைச்சி 'L' பூநகரி 'G' ஆகிய பதிவேடுகளும் அனுப்பப்பட்டுள்ளன.

14- 3- 1990 தொடக்கம் இவ்வேலைகள் தொடர்பான சகல விண்ணப்பங்களும் கிளிநொச்சி மாவட்ட அலுவலகத்தினால் ஏற்றுக்கொள்ளப் படவிருக்கின்றன. இது தொடர்பாக கிளிநொச்சி மாவட்ட மேலதிகப் பதிவாளர் ந. சதாசிவஐயர் அவர்கள் தகவல் தருகையில் இனிமேல் கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள தேவாலயங்களில் நடைபெறும் திருமணங்கள் யாவும் கிளிநொச்சி அலுவலகத்திலேயே பதிய வேண்டும் என்றும், தமிழில் வழங்கப்படும் பிறப்பு, இறப்பு, திருமண அத்தாட்சிப் பத்திரங்களின் ஆங்கிலமொழி பெயர்ப்பு தேவைப்படுபவர்கள் அதற்குரிய விண்ணப்ப பத்திரத்தை நிரப்பி கொடுப்பதன் மூலம் இந்தக் காரியாலயத்தில் மொழிபெயர்ப்பைப் பெற்றுக் கொள்ள முடியும் என்றார். (19)

## குளிர்த்தி

கைகடி வடக்கு பூதராயர் கோவிலில் வருடந்தோறும் நடைபெறும் மகேசுர பூசை (குளிர்த்தி) நாளை வெள்ளிக்கிழமை நடைபெறும்.

# பாலைதீவில் பெருமளவு மீன்

(விசேட நிருபர்)

பாலைதீவு அந்தோனியாருக்கு நேர்ந்து வீசிய வலையில் ஏழாயிரம் மீன்கள் பிடிபட்டன.

கோவிலை அண்மித்த பகுதியில் வீசிய வலையிலேயே இந்தளவு பெரும் தொகை மீன்கள் பிடிபட்டது.

இதுவரை காலத்தில் இந்தளவு தொகையாக மீன் பிடிபட்டது இதுதான் முதல் தடவை என்றும் அதிசய நிகழ்ச்சி என்றும் மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

இக்கோவிலுக்கு யாத்திரிகர்களாக வந்து நின்றவர்களுக்கு இலவசமாக மூவாயிரத்திற்கும் மேற்பட்ட மீன்கள் வழங்கப்பட்டன.

குருநகருக்கு எடுத்து வரப்பட்ட எஞ்சிய மீன்கள் சந்தைப்படுததியதில் கோவிலுக்கு இருபத்தேழாயிரம் ரூபா சேர்ந்துள்ளதாகவும் அறியப்படுகிறது. (21)

## ஆலயத்தில் திருட்டு

(விசேட நிருபர்)

யாழ். கலட்டி கற்பக விநாயகர் ஆலயத்தில் மூலஸ்தான விக்கிரகத்தைப் பெயர்த்து 60 ஆயிரம் ரூபா பெறுமதியான ஐம்பொன் மற்றும் பொருட்கள் திருடப்பட்டுள்ளன, (21)

## 40 ஆயிரம் ரூபாவிற்கு தீர்வையற்ற பொருட்களை வாங்கலாம்

(யாழ்ப்பாணம்)

வெளிநாடுகளில் வேலை செய்த பின்னர் நாடு திரும்புபவர்கள் இனி நாற்பதினாயிரம் ரூபா பெறுமதியான பொருட்களை தீர்வையற்ற கடைகளிலிருந்து தீர்வையின்றி வாங்க வழிசெய்யப் படவுள்ளது

தற்போது வெளிநாடுகளிலிருந்து திரும்புபவர்கள் இருபத்தையாயிரம் ரூபா வரை தீர்வையின்றிப் பொருட்களை வாங்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

புதிய முறையினால் நாடு திரும்புபவர்கள் நன்மையடைவதுடன், அரசுக்கும் கூடுதலான அந்நியச் செலாவணி கிடைக்கும் எனச்சுங்கப்பகுதி நிதியமைச்சுக்குத் தெரிவித்துள்ளது.

இது குறித்து நிதியமைச்சு அதிகாரிகள் ஆராய்ந்து வருகிறனர்.

# சாரங்களை சந்தைப்படுத்துவதில் காத்தான்குடி நெசவாளர் கஷ்டம்!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு காத்தான்குடியில் பிரதான கைத்தொழிலாக விளங்கும் கைத்தறி நெசவு மூலம் தினசரி சராசரி 15,000 கைக்தறி சாரங்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன.

கைத்தறி சாரம் தயாரிப்பதில் இலங்கையில் காத்தான்குடி கைத்தறி நெசவாளர்கள் முன்னணி வகிக்கிறார்கள்.

இப்பகுதியில் தனிப்பட்ட ரீதியிலும் நிறுவன ரீதியாகவும் சுமார் 5,000 கைத்தறிகள் உள்ளன.

இக்கைத்தறிகளில் காத்தான்குடி, சுற்றாடல் பிரதேசங்களைச் சேர்ந்த ஆண் பெண் உட்பட 15,000 பேர் வரை வேலை வாய்ப்பு பெற்றுள்ளார்கள்.

மாதாந்தம் உழைப்பிற்கேற்ப ரூபா 1100-1500 வரை வருமானம் பெறுகிறார்கள்.

இதன்விலை தரத்திற்கேற்ப ரூபா 85-115 வரை விற்பனை செய்யப்படுகிறது.

மேற்படி கைத்தறி நெசவாளர்கள் தமது உற்பத்தியை உரிய முறையில் சந்தைப் படுத்தும் வாய்ப்பு இல்லை என கவலை தெரிவிககிறார்கள்.

தனிப்பட்ட உள்ளூர், வெளியூர் வியாபாரிகள் மூலம்தான் சந்தைப்படுத்துகிறார்கள். இதனால் நியாயமான விலையின்மை, பணக்கொடுப்பனவு தாமதம், நம்பிக்கை மோசடி போன்றவற்றால் பாதிக்கப் படுகிறார்கள்.

இந்நிலையில் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி வாய்ப்பு சலுசலா, கூட்டுறவு மொத்த விற்பனவு இலாகா போன்றவற்றின் மூலம் சந்தைப்படுத்துதல் போன்ற வசதிகள் செய்துதர சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என கைத்தறி நெசவாளர்கள் கோருகிறார்கள். (37)

## மட்டுநகரில் வீதிப் போக்குவரத்து

(மட்டக் களப்பு)

மட்டக்களப்பு பொலிஸ் போக்குவரத்து பிரிவினால் பாடசாலைகளில்வீதி போக்குவரத்து தொடர்பான விரிவுரைகள் வழங்கப் படுகின்றன.

தமிழீழ விடுதலைபபுலிகளால் வீதிப்போக்குவரத்து ஒழுங்குகள் அமுல்செய்ய அனுமதிக்கப் பட்டுள்ளது.

இந்நிலையால் பொலிஸ் வீதிப்போக்குவரத்து பொறுப்பதிகாரி திரு.எஸ் சுவர்ணகுமார் மேற்படி விரிவுரைகள் வழங்கி வருகிறார். (37)

## மட்டக்களப்புக்கு மாவட்ட நீதிபதி நிரந்தரமாக நியமிக்கவும்

### சட்டத்தரணிகள் கோரிக்கை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்ட நீதிமன்றத்திற்கு நிரந்தர நீதிபதியை விரைவில் நியமனம்செய்யுமாறு நீதிச் சேவை ஆணைக் குழுவை கோரும் தீர்மானம் அண்மையில் மாவட்ட சட்டத்தரணிகள் சங்க வருடாந்தகூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது

மேற்படி சங்கத் தலைவர் திரு.ரி. வேலுப்பிள்ளை தலைமையில் இக் கூட்டம் நடைபெற்றது.

நிரந்தர நீதிபதிஇன்றி சிவில் வழக்குகள் தேங்கிக்கிடப்பதை நீதிச் சேவை ஆணைக் குழுவின கவனத்திற்கு கொண்டுவருவதென்றும் தீர்மானிக்கப் பட்டது.

மாவட்ட காணிப் பிரிவில் காணிகள் பதிவு செய்தல், அத்தாட்சிப் பத்திரம் பெற்றுக் கொள்ளல் ஆகியவற்றில் பெரும் கால தாமதம் ஏற்படுவதால் இதனை நிவர்த்தி செய்யுமாறு உள்நாட்டு அலுவல்கள் அமைச்சை கோருவதென்றும் தீர்மானிக்கப் பட்டது. (37)

## மறிச்சுக்கட்டி முஸ்லிம் மகா வித்தியாலயத்திற்கு விடுதலைப் புலிகள் உதவி

(மன்னார்)

மன்னார் மறிச்சுக்கட்டு முஸ்லீம் மகா வித்தியாலயத்தில் போதியளவு கட்டிட வசதிகளையும் இட நெருக்கடியையும் கருத்திற் கொண்டு தமிழீழ விடுதலைப் புலிகளின் உதவியுடனும் அனுசரணையுடனும் மறிச்சுக்கட்டு பொதுமக்களால் தற்காலிகமாக 20X40 அளவிலான பாடசாலைக் கட்டிடம் எதிர்வரும் வியாழக்கிழமை 08-03-90)அன்று காலை8-30) மணிக்கு தமிழீழ விடுதலைப் புலிகளின் மறிச்சுக்கட்டுப் பொறுப்பாளர் திரு. ரமேஸ் அவர்களால் திறந்து வைக்கப்படவுள்ளது. இப்பாடசாலையினால் சுமார் எழுபது மாணவர்கள் பலன் பெறவுள்ளனர்

மேற்படி மகாவித்தியாலயத்தின் புதிய கட்டிடத் திறப்பு விழாவையொட்டி நேற்று வித்தியாலத்தில் முழுநாள் அளவிலான மாணவர்களுக் இடையிலான இல்ல விளையாட்டுப் போட்டிநடைபெற்றது இவ்வில்ல விளையாட்டுப்போட்டிக்கு மன்னார் கல்வித் திணைக்களத்தை சேர்ந்த பிரதம கல்வி அதிகாரி ஜனாப் ரகீம் அவர்கள் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

இன்றுதான் கல்வியங்காட்டு மக்கள்
நிம்மதியாக சாப்பிடுவதற்கு
எமது வீரவேங்கைகள் வழிவகுத்து
கொடுத்துக் கொண்டிருக்கின்றார்கள்,
மேலும் அவர்களது பணி வழர
வாழ்த்துகின்றோம்!

க. செ. கைலாசம்பிள்ளை
அன் கோ.

பலசரக்குச் சாமான்களை
உத்தரவாதத்துடனும் சுகாதார முறைப்படிபெற
நாடுங்கள்!

க. செ. கைலாசம்பிள்ளை
அன் கோ
கல்வியங்காடு.

(B 184)

கிறிக்கெட்

## கொக்குவில் இந்து - கனகரட்ணம் போட்டி; எவருக்கும் வெற்றியில்லை

(யாழ். விளையாட்டு நிருபர்)

கனகரெட்ணம் மத்திய மகா வித்தியாலயத்திற்கும் கொக்குவில் இந்துக் கல்லூரிக்கும் நடைபெற்ற சினேகபூர்வமான கிரிக்கட் போட்டியில் இரு கல்லூரிகளும் சிறப்பாக விளையாடினார்கள். இப் போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவுற்றது. முதலில் துடுப்பெடுத்தாடிய கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம் சகல விக்கட்டுக்களையும் இழந்து 222 ஓட்டங்களைப் பெற்றது. இதில் முகுந்தன் 40 ஓட்டங்களையும், அருள் செல்வன் 32ஓட்டங்களையும் ரொனி 43 ஓட்டங்களையும் சுரேந்திரா 23 ஓட்டங்களையும் பெற்றனர்.

கொக்குவில் இந்துக் கல்லூரி தனது முதலாவது இன்னிங்சில் 147 ஓட்டங்களைப் பெற்றனர். இதில் ஜெயன் மனோகர் 30 ஓட்டங்களை ஆட்டமிழக்காமல் பெற்றுள்ளார் பிரபாகரன் 17 ஓட்டங்களையும், சிரிகரன் 15 ஓட்டங்களையும் பெற்றனர். கண்ணன் 44 ஓட்டங்களைக் கொடுத்து 4விக்கெட்டுக்களை கைப்பற்றினார். நாதன் 24 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கெட்டுக்களை கைப்பற்றினார், அருள்செல்வன் 2 விக்கட்டுகளை கைப்பற்றினார்.

கனகரெட்ணம்மத்திய மத்திய மகாவித்தியாலயம் 2வது இன்னிங்சில் 5 விக்கட்டுக்கள் நஷ்டத்திற்கு 79 ஓட்டங்களைப் பெற்றனர். சுதாகரன் 41 ஓட்டங்களை மின்னல் வேகத்தில் அடித்தார். பிரபாகரன் ஆட்டம்மிழக்காமல் 26 ஓட்டங்களைப் பெற்றார். ரொனி 35 ஓட்டங்களைக் கொடுத்து 1 விக்கட்டை கைப்பற்றினார். அருள்செல்வன் 10 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கட்டுக்களைக் கைப்பற்றினார். (42)

சிற்றிசன் மியூசிக் சென்ரர்
கல்வியங்காடு.

பாடல்கள் ஒலிப்பதிவு செய்து
கொடுக்கப்படும்.

பழைய/புதிய சினிமாப்பாடல்களுக்கும்
இளம் காதலர்கள் கேட்டு மகிழும் இனிய
சோகப் பாட்டுக்களுக்கும்
தலைசிறந்த ஸ்தாபனம்

சிற்றிசன் மியூசிக் சென்ரர்
கல்வியங்காடு.

(B - 196)

ஈழநாதமே நீ வாழ்க!

V. R. K. மில்ஸ்
கல்வியங்காடு.

மிளகாய் தூய முறையில் அரைத்துக்
கொடுக்கப்படும்.

வாய்க்கு சுவைக்கேற்ற கோப்பி அரைத்துக்
கொடுக்கப்படும்.

திருமண விருந்துக்கேற்ற முறையில் தாக்குக்கு
ருசியான நெல் குற்றிக் கொடுக்கப்படும்.

பெண்களின் பேன்களை அழிப்பதற்கு சுகாதார
முறையில் சீயாக்காய் அரைத்துக் கொடுக்கப்படும்;
நாடுங்கள்

V. R. K. மில்ஸ்
கல்வியங்காடு.

(B-109)

நல்லூரில்

தரமான ஆங்கில மருந்து, பால் உணவு,
குளிர்பானம், அழகு சாதனப் பொருட்கள்
நிதான விலையில் கிடைக்குமிடம்

மெடி எயிட்ஸ்

644, பருத்தித்துறை வீதி,
நல்லூர்.

(B - 185)

## யாழ் பல்கலைக்கழகம் உலகில் புகழ் பெற வேண்டும்

ஐயா,

5. 3. 90 ஈழநாதத்தில் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் பெருமையையும் சிறுமையையும் வாசித்தேன. அதில் ஊர்சுற்றி எழுதுகிறார். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இந்தியாவில் சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திற்கும் ஒரு படிமேலாக சகல துறைகளிலும் மேம்பட்டுள்ளது என்று. இதை வாசிக்கும் போது பெருமை அடைந்தேன் தென்னிலங்கைப் பல்கலைக்கழகங்களுக்குரிய வசதிகளும் பொருளாதாரமும் அக்கறையும் தமிழ் ஈழத்திலுள்ள பல்கலைக்கழகங்களுக்கும் கிடைக்குமானால் உலகமே போற்றும் வண்ணம் எமது மாணவர்கள் சாதனை புரிவார்கள் என்பது மறுக்க முடியாத உண்மை ஆனால்?

நல்லூரைச் சேர்ந்த மாணவன் ஆதவன் என்பவர் யாழ். பல்கலைக் கழகத்தில் வேறு பல மாணவர்களால் ராங்கிங் என்ற பெயரில் பட்ட அவமானத்தையும் சித்திரவதைகளையும் வேதனை தாங்க மாட்டாமல் ஈழநாதத்தில் எழுதியுள்ளார் இதில் கவனிக்க வேண்டிய ஒரு அம்சம் என்னவென்றால் இவர் துன்புறுத்தப்படும்போது வேறு மாணவர்களோ காவல் கடமையில் ஈடுபட்டவர்களோ ஆசிரியர்களோ நிர்வாகிகளோ இம் மாணவனுக்கு உதவி செய்யவோ அல்லது இழிவு செயல் செய்த மாணவர்களைக் கண்டிக்கவோ இல்லை. படிப்பில் ஆர்வமுள்ள எந்த மாணவனும் ஆதவன் என்ற இந்த மசணவனின் விரத்தியான எழுத்தைப் படித்தால் நிட்சயம் அவன் மேல் படிப்பைத் தொடரமாட்டான்.

அப்படியானால் பெருமைப்பட்டு எழுதிய ஊர்சுற்றியின் முகத்தில் இநத ராக்கிங் என்ற செயல் கரியல்லவா பூசுகிறது அடுத்து சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழகம் இன்றல்ல பலவருடங்களாகத் தமிழ்நாட்டில் புகழ் பரப்பி வரும் ஒரு ஸ்தாபனம் ஆனால் ஒன்று பத்து நூறு ஆயிரமாக மாணவர்கள் விரும்பிக் கல்வி

ஈழநாதமே! உன் பத்திரிகைக்கு
எமது நன்றிகள் உரித்தாகுக.

கல்வியங்காடு வீரவேங்கைகளே!
எமது மக்களை இன்று வரை
பாதுகாத்து வருவதையிட்டு
பெருமகிழ்ச்சியடைகிறோம்!

ஸ்ரீ தேவி கருமாரி அம்மன் துணை.

தமிழ் மக்களினதும்
மண்ணினதும்
விடுதலைச் சங்கநாதமாக
'ஈழநாதம்' ஒலிக்க
எமது நல்வாழ்த்துக்கள்!



நாடுங்கள்

**V. R. K. மில்ஸ்**

கல்வியங்காடு.

(B-109)

ஈழநாதமே! உன் பத்திரிகைக்கு
எமது நன்றிகள் உரித்தாகுக.

கல்வியங்காடு வீரவேங்கைகளே!
எமது மக்களை இன்று வரை
பாதுகாத்து வருவதையிட்டு
பெருமகிழ்ச்சியடைகிறோம்!

**சாம் சிவா**

மின்சார, பைப் விற்பனையாளர்கள்.

❋

**சாம் சிவா**

கல்வியங்காடு

(B. 192)

ஈழநாதமே!
உன் பணி தொடர சிறக்க
எமது நல்வாழ்த்துக்கள்.

❋


**ஹோம் டீ நீட்ஸ்**

பலசரக்கு வியாபாரம்
பிரதான வீதி,
ஊர்காவற்றுறை.

(B. 199)

ஸ்ரீ தேவி கருமாரி அம்மன் துணை.

தமிழ் மக்களினதும்
மண்ணினதும்
விடுதலைச் சங்கநாதமாக
'ஈழநாதம்' ஒலிக்க
எமது நல்வாழ்த்துக்கள்!



# கருமாரி மோட்டார் கொம்பனி

281 J/S ஸ்ரானலி வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 2262

B - 183

வர்களோ காவல் கடமையில் ஈடுபட்டவர்களோ ஆசிரியர்களோ நிர்வாகிகளோ இம் மாணவனுக்கு உதவி செய்யவோ அல்லது இழிவு செயல் செய்த மாணவர்களைக் கண்டிக்கவோ இல்லை. படிப்பில் ஆர்வமுள்ள எந்த மாணவனும் ஆதவன் என்ற இந்த மசணவனின் விரத்தியான எழுத்தைப் படித்தால் நிட்சயம் அவன் மேல் படிப்பைத் தொடரமாட்டான்.

அப்படியானால் பெருமைப்பட்டு எழுதிய ஊர்சுற்றியின் முகத்தில் இநதராக்கிங் என்ற செயல் கரியல்லவா பூசுகிறது அடுத்து சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழகம் இன்றல்ல பலவருடங்களாகத் தமிழ்நாட்டில் புகழ் பரப்பி வரும் ஒரு ஸ்தாபனம் ஆனால் ஒன்று பத்து நூறு ஆயிரமாக மாணவர்கள் விரும்பிக் கல்வியில் முன்னேறி நாட்டிற்குப் பெருமை தேடித் தருகிறார்கள் ஆகவே சம்பந்தப்பட்ட இம்மாணவர்களை ஆசிரிய அதிகாரிகளுடனும் பலதுறைகளிலும் சவனம் செலுத்தி வரும் புலி இயக்க வீரா்களும் அன்புடனும் புரிந்து கொள்ளும் வகையிலும் இம்மாணவர்களுக்கு எடுத்துரைத்து ஈழ மண்ணின் தமிழ் மாணவரின் வளர்ச்சியையும் மேம்பாட்டையும் யாழ் பல்கலைக்கழகத்தின் புகழையும் உலகறியச் செய்ய வேண்டும்.

பீற்றர் பவுல்
நாவாந்துறை
யாழ்.

---

## விடுதலைப் புலிகள் உதவி

(தீவுப்பகுதி)

தமிழீழ விடுதலைப் புலிகளின் தீவுப்பகுதி பிரிவைச் சேர்ந்த பொறுப்பாளர்கள் திரு. ஜேம்ஸ், திரு. நரேஸ், திரு. வீ. கஸ்ரோ ஆகியோர் மண்கும்பான் கிராமத்திற்கு விஜயம் செய்து இக் கிராம மக்களின் குறைகளைக் கேட்டறிந்ததுடன், மண்கும்பான் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் அபிவிருத்திக்காக பதினையாயிரம் ரூபாவையும் மண்கும்பான் வீதியொன்றை திருத்துவதற்காகவும் பத்தாயிரம் ரூபாவையும் அன்பளிப்சாக வழங்கியுள்ளனர் இந்த அன்பளிப்பைப் பெற்ற மண்கும்பான் கிராம மக்கள் தமிழீழ விடுதலைப் புலிகளின் இச் செயலையிட்டு நன்றியும். பாராட்டையும் தெரிவிக்கின்றனர். (15)

சிந்தனைக்கு

எண் பொருள வாகச் செலச் சொல்லித்தான்யிறர்வாய
நுண் பொருள் காண்பதறிவு

- திருக்குறள்

ஈழநாதம்

31, வைமன் வீதி, யாழ்ப்பாணம். 08 - 03 - 90

## அஷ்ரப்பிற்குத் தெரியாதது!

வடக்கிலும் கிழக்கிலும் அமைதி நிலவவில்லை என்று இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஜனாப் எம். எச். எம். அஷ்ரப் கூறியிருக்கிறார்.

வரதராஜப்பெருமாளின் ஒருதலைப்பட்சமான ஈழப் பிரகடனம் பற்றி பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஒருநாள் விவாதத்தில் கலந்து கொண்டு பேசுகையிலேயே முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஜனாப் அஷ்ரப் இப்படித் தெரிவித்திருக்கிறார்.

பாராளுமன்றத்தினுள் எதையும் பேசுவதற்கு ஜனாப் அஷ்ரப்பிற்கு உரிமை இருக்கிறது.

வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு ஜனாப் அஷ்ரப் சமீபகாலத்தில் சென்று பார்க்கவில்லையே என்ற சந்தேகம் எழுகிறது. இவர் இப்பகுதிகளுக்குக் கடைசியாக எப்போது போனார்? என்று கேட்கத் தோன்றுகிறது.

இப்பகுதிகளுக்கு இவர் போய்ப்பார்க்காவிட்டாலும் பரவாயில்லை. அங்கிருந்துவரும் மக்கள்கூடவா மக்கள் பிரதிநிதியான ஜனாப் அஷ்ரப்பைச் சந்தித்து அங்குள்ள நிலைமையைச் சொல்லாமலிருக்கிறார்கள்!

இவர் மக்களைச் சந்திக்கப் பயப்படுகின்றாரோ என்றும் கேட்கத் தோன்றுகிறது.

1987 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் பத்தாம் தேதியிலிருந்து வடக்குக் கிழக்கு மாகாணங்களில் 'அமைதிப் படை' என்ற இந்திய இராணுவம் நடத்திய தாக்குதல்களும் மக்கள் பட்ட அவதியும் ஜனாப் அஷ்ரப்புக்குத் தெரிந்திருக்க முடியாது. ஏனெனில் அவர் கொழும்பில் உல்லாசமாக வாழ்ந்துகொண்டிருந்தார்.

இந்திய இராணுவத்தின் பாதுகாப்புடன் வந்த குழுக்களைச் சேர்ந்தவர்கள் பொதுமக்களையும் வர்த்தகர்

# மட்டக்களப்பு மாவட்டத்தில்
# இம்முறை நெல் விளைச்சல் அதிகம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் தற்போது நடைபெற்று வரும் 1989 / 90 ஆண்டு பெரும்போக வேளாண்மை அறுவடையில் நெல் விளைச்சல் கடந்த வருடத்தை விட இவ் வருடம் பத்துப் புசல் அதிகரித்துள்ளது.

இம் மாவட்டத்தில் 82,000 ஏக்கரில் பெரும்போக வேளாண்மைச் செய்கை விவசாயதிணைக்களம் எதிர்பார்த்த போதிலும் 1 இலட்சத்து 4265 ஏக்கரில் செய்கை பண்ணப் பட்டது. எதிர்பார்த்ததை விட 30 சத வீதம் அதிகமானதாகும்.

இம் மாவட்ட விவசாயிகளுக்கு தேவையான விதை நெல் 4300 புசல் இம்முறை கெயர் ஸ்தாபன உதவியுடன் உள்ளூர் விவசாயிகள் மூலம் விநியோகம் செய்யப்பட்டது.

நீர்ப்பாசனம் போதியளவு இருந்ததும், உள்ளூர் விதை நெல், நோய்த்தாக்கம் இன்மை போன்ற காரணங்களினால் விளைச்சல் அதிகரித்துள்ளது.

கடந்த வருட பெரும்போக அறுவடையால் ஏக்கருக்கு சராசரி விளைச்சல் 65 புசல் ஆகும்.

இம் முறை சராசரி விளைச்சல் 75 சத வீதமாக இருப்பதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

88 / 89 ஆண்டு பெரும்போகம் செய்யப்பட்ட மொத்த ஏக் 84,745 ஆகும். இம்முறை 14,265 ஏக்கர் செய்கை பண்ணப்பட்டது. மேற்படி செய்கை கடந்த காலங்களை விட 22 சத வீதம் அதிகரித்துள்ளது. கடந்த காலங்களில் 60 சத வீதமாகும். இவ் வருடம் 82 சத வீதமாகும். (37)

## யாழ்ப்பாணத்தில் பெண்களுக்கு சமசந்தர்ப்பம் இல்லை

- தேவனேசன் நேசையா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணச் சமூகம் பழைமை பேணும் பிற்போக்கான சமூகம் என்று சொல்வதுண்டு. இக்கூற்றில் உண்மையில்லாமலில்லை. சாதி அமைப்பில் சில மாற்றங்கள் காலங்கடந்து ஏற்பட்டுள்ளதென்றாலும், சாதி வித்தியாசம் இன்றும் யாழ்ப்பாணத்தில் பலமாக உள்ளது. இந்த வகையில் இலங்கையில் உள்ள சமூகங்களில் தமிழ் சமூகம் மிகவும் பிற்போக்கானது- இவ்வாறு புனர்வாழ்வு அமைச்சின் ஆலோசகர் கலாநிதி தேவநேசன் நேசையா சுண்டிக்குளி மகளிர் கல்லூரி பரிசளிப்பு விழாவில் உரையாற்றுகையில் கூறினார்.

அவர் தொடர்ந்து பேசுகையில், சாதித் தடைகளை அகற்றுவதற்குக் கிறிஸ்தவக் கல்வி நிறுவனங்களும் மிகக் குறைவான சேவையையே செய்துள்ளன என்றும், யாழ்ப்பாணத்து ஜனத்தொகையுடன் ஒப்பிடும்போது பிரபல்யமான கிறிஸ்தவக் கல்லூரியில் கல்வி பயிலும் தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த மாணவரினதும், கற்பிக்கும் ஆசிரியர்களினதும் விகிதம் என்ன? சமூகத்தில் உள்ள ஏற்றத் தாழ்வுகளை இல்லாமல் செய்வதற்கும், சமூக ஒத்தாசையை ஏற்படுத்துவதற்குமான சமூக - பொருளாதாரத் திட்டங்கள் ஏதாவது உண்டா? இவ்வாறு கேள்விகளைத் தொடுத்தார்.

மேலும் அவர் பேசுகையில், தென் கிழக்கு ஆசியாவில் யாழ்ப்பாணத்தில் தான் முதன்முதலாக பெண்களுக்கான கல்லூரிகள் அமைக்கப்பட்டன என்றும், ஆனால் பெண்கள் தொழில் வாய்ப்புகளில் ஒதுக்கப்பட்டுள்ளார்கள் என்றும், பெண்களுக்கென்றே சில வேலைகள் வழங்கப்பட்டதாகவும், அவர்கள் பல தடைபாடுகள் மத்தியில் வாழவேண்டியுள்ளது என்றார்.

கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை முன்னாள் அதிபர் செல்வி எஸ்.சின்னப்பு பரிசில்களை வழங்கினார்.

### மக்கள் மடல்

## அநாகரீகச் செயல்களைக் கைவிடுங்கள்!

ஆசிரியர்,
ஈழநாதம்

எமது மாணவர்களின் உயர் கல்வியை மேம்படுத்துவதற்காகவே பல்கலைக்கழகங்கள் அமைக்கப்பட்டன. வெறும் 'ராக்கிங்' கிற்காக அல்ல. நாம் கடந்த 6 - 7 வருடங்களாக எமது பாடசாலை வாழ்க்கையினை ஒழுங்காக கழிக்க முடியாமல் போய் பெரும் மனவருத்தத்திற்குள்ளாகி இன்று மீண்டும் ஒரு சுதந்திரமான பாடசாலை வாழ்க்கையில் காலடி வைத்துள்ளோம்.

இந்த நிலையில் எமது மாணவ சகோதரர்கள் தொடர்ந்து பாடங்களில் கவனம் செலுத்தாமல் வெறும் 'ராக்கிங்'கால் புதிய சக மாணவர்களை இம்சைப்படுத்துவது மிகவும் மனவேதனைக்குரிய விடயமாகும்.

1990-03-05 அன்று தங்கள் பத்திரிகையில் 'ராங்கிங்' கால் மிகவும் பாதிக்கப்பட்ட புதிய சகோதர மாணவன் ஆதவன் தமது உள்ளக் குமுறல்களை கொட்டித் தீர்த்திருக்கின்றார். இதனைப் பார்க்கும் போது, பல்கலைக்கழக மேற்படிப்பு எம்மைப் போன்றவர்களிற்கு மிகவும் கசப்புணர்வையே ஏற்படுத்துகின்றது.

ஆகவே பல்கலைக்கழக மாணவ சகோதரர்கள் இப்படியான அநாகரீகச் செயல்களைக் கைவிட்டு, புதிய மாணவர்களைத் திறமையான முறையில் மேற்படிப்பைத் தொடர உதவுமாறு மிக மன வேதனையுடன் கேட்டுக் கொள்கின்றேன்.

இப்படிக்கு
புத்தூர். சி. தமிழ்மறவன்

## பலகலைக்கழகத்தைக் காப்பாற்ற வேண்டும்

ஆசிரியர்,
ஈழநாதம்

போன்றே தமிழர் பண்பாடு, மொழிப்பற்று, இனப்பற்று ஆகியவற்றின் வளர்ச்சிக்காக

## குடிபோதையில் டாக்டர் தாக்கி ஒருபெண் உட்பட நால்வர் காயம்

(கொழும்பு)

குடிபோதையில் இருந்ததாகச் சந்தேகிக்கப்படும் டாக்டர் ஒருவர், ராகமையில் கொழும்பு வடக்கு அரசாங்க ஆஸ்பத்திரியில் ஒரு பெண் ஊழியரையும், மற்றும் மூன்று ஆஸ்பத்திரி ஊழியர்களையும் தாக்கினதாகவும் கின்றன. வழியில் பெண் ஊழியரைச் சந்திப்பதற்கு முன், அவர் கண்ணில் தென்பட்ட இரு சிற்றூழியர்களையும் டாக்டர் தாக்கியுள்ளதாகச் சொல்லப்படுகிறது.

கட்டுக்கடங்காத நிலையில், டாக்டர் பெண் ஊழியரைப்

### ஊர்சுற்றி எழுதுவது

"ஜனவரி மாதம் முதல் வாரத்தில் திருவனந்தபுரத்திலுள்ள பொலிஸ்காரர்களின் மனைவிகள் அனைவரும் உதவி சுப்பிரின்டென்ட் அலுவலகத்தை நோக்கிஊர்வலமாகச்சென்றனர். காரணம் விசித்திமானது. விசாரித்தபோது கிடைத்தவை, சமீபகாலமாகவேபொலிஸ்காரர்கள் பலரும் விஷமிகளால் தாக்கப்பட்டு வருகின்றனர். குறிப்பாக திருவனந்தபுரத்தில் இது மிகவும் அதிகம். தங்கள் கணவன்மார்களுக்கு உயிர்ப் பாதுகாப்பு இல்லையென்று மனைவிமார்கள் கருதியதால்தான் இந்தப்போராட்டம்.

இவர்களது கோஷம், ''பொலிஸ் அதிகாரிகளே! எங்களது கணவன்மார்களுக்குப் பாதுகாப்புக் கொடுங்கள்''. என்பதுதான். ஊர்வலத்தைக் கலைந்து செல்லும்படி பல முறை பொலிஸார் சொல்லியும் கேட்காததால் தாங்கள் மனைவிகளையே கைது செய்யும் நிலை பொலிஸாருக்கு ஏற்பட்டு விட்டது. பிறகு மேலதிகாரி ஒருவர் தலையிட்டு பொலிஸ்காரர்களின்மனைவிகளிடம் மனுக்களைப் பெற்றுக்கொண்டு திருப்பியனுப்பியிருக்கிறார்''

இது ஜூனியர் விகடனில் வெளிவந்த ஒரு செய்தி.

பரவாயில்லை! நம் நாட்டுப் பெண்களை இவர்களுடன் ஒப்பிட முடியாது.

நம் நாட்டு இளம் யுவதிகளை இப்பொழுது வீதிகளில் சைக்கிளிலும் மோட்டார் சைக்கிள்களிலும் பார்க்கும்போது பெருமையாக இருக்கிறது.

சில சமயங்களில் இந்த யுவதிகளை நான்கைந்து பேர் வீதிகளில் சமமாகக் கை கோர்த்துக்கொண்டு சைக்கிள்களில் முன்னாலும் பின்னாலும் வருபவர்களைப் பற்றிச் சிறிதும் சட்டை செய்யாமல் செல்லும் போது என்னவோ போலிருக்கிறது!

இன்று சர்வதேச மகளிர் தினமல்லவா? அதனால் தான் மகளிரைப்பற்றி எழுதியிருக்கிறேன்.

ஆண்களையும் வாழ

சந்தேகம் எழுகிறது. இவர் இப்பகுதிகளுக்குக் கடைசியாக எப்போது போனார்? என்று கேட்கத் தோன்றுகிறது.

இப்பகுதிகளுக்கு இவர் போய்ப்பார்க்காவிட்டாலும் பரவாயில்லை. அங்கிருந்துவரும் மக்கள்கூடவா மக்கள் பிரதிநிதியான ஜனாப் அஷ்ரப்பைச் சந்தித்து அங்குள்ள நிலைமையைச் சொல்லாமலிருக்கிறார்கள்!

இவர் மக்களைச் சந்திக்கப் பயப்படுகின்றாரோ என்றும் கேட்கத் தோன்றுகிறது.

1987 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் பத்தாம் தேதியிலிருந்து வடக்குக் கிழக்கு மாகாணங்களில் 'அமைதிப் படை' என்ற இந்திய இராணுவம் நடத்திய தாக்குதல்களும் மக்கள் பட்ட அவதியும் ஜனாப் அஷ்ரப்புக்குத் தெரிந்திருக்க முடியாது. ஏனெனில் அவர் கொழும்பில் உல்லாசமாக வாழ்ந்துகொண்டிருந்தார்.

இந்திய இராணுவத்தின் பாதுகாப்புடன் வந்த குழுக்களைச் சேர்ந்தவர்கள் பொதுமக்களையும் வர்த்தகர்களையும் படுத்தியபாடும் ஜனாப் அஷ்ரப்புக்குத் தெரிந்திருக்க முடியாது. அவர் கொழும்பில் பதுங்கியிருந்தார்.

இந்திய இராணுவம் வடக்குக் கிழக்கு மாகாணங்களிலிருந்து வெளியேறத் தொடங்கியதும் அவர்களின் பாதுகாப்பிலிருந்த குழுக்கள் கொலை, கொள்ளைகளில் கண்மூடித்தனமாக ஈடுபட்டிருந்தபோது மக்கள் வீதிகளில் நடமாடவும், வீடுகளில் தங்கியிருக்கவும் அஞ்சி தினமும் செத்துப் பிழைத்த சம்பவங்களும் ஜனாப் அஷ்ரப்பிற்குத் தெரிந்திருக்க நியாயமில்லை.

இந்திய இராணுவத்தின் பின்னால் இந்தக் குழுக்கள் செல்வதற்குத் தயார் செய்த சமயம் வீடுகளிலும் கடைகளிலும் கொள்ளையடிக்கத் தொடங்கியதையடுத்து கடைகளில் அத்தியாவசியப் பொருள்களைக்கூடக் காண முடியாமலிருந்தது.

மாலை ஆறுமணியுடன் வீடுகள் பூட்டப்பட்டுவிடும்; வீதிகள் ஜனநடமாட்டமின்றி வெறிச்சோடிக் கிடக்கும். சிரித்த முகங்களைக் காண்பதே அரிது. இந்தக் காட்சிகளை ஜனாப் அஷ்ரப் கண்டிருக்கமாட்டார்.

இன்று வடக்கிலும் கிழக்கிலும் (திருமலையில் ஒருசில பகுதிகளைத் தவிர) மக்கள் இரவில் திரைப் படம் பார்த்துவிட்டு அச்சமின்றி வீடு செல்கின்றார்கள்; இரவிலும் கடைகள் திறக்கப்பட்டிருக்கின்றன; பாடசாலைகளில் விளையாட்டுப் போட்டிகள் நடைபெறுகின்றன. வாகனங்கள் இரவிலும் வீதிகளில் ஓடுகின்றன.

இவற்றைக் காண்பதற்கும் அஷ்ரப்பிற்கு நேரமில்லை; நேரமிருந்தாலும் இவற்றைப் பார்க்க அவருக்கு மனம் வராது போலும்! மக்கள் நிம்மதியாகவும் ஒற்றுமையாகவும் சந்தோஷமாகவும் வாழ்ந்தால் அவருக்கு அரசியலில் இடமில்லாமல் போய்விடுமே.

ஜனாப் அஷ்ரப்பிற்கு நாம் பதில் சொல்ல முன்பே பாராளுமன்றத்திலேயே ஈழவர் ஜனநாயக முன்னணி எம். பி. பரராஜசிங்கம், ''வடக்குக் கிழக்கில் இன்று சுமுகநிலை தோன்றி அதமதி நிலவுகிறது'' என்று பதில் சொல்லிவிட்டார்.

பாவம் அஷ்ரப்!

நாம் கடந்த 6-7 வருடங்களாக எமது பாடசாலை வாழ்க்கையினை ஒழுங்காக கழிக்க முடியாமல் போய் பெரும் மனவருத்தத்திற்குள்ளாகி இன்று மீண்டும் ஒரு சுதந்திரமான பாடசாலை வாழ்க்கையில் காலடி வைத்துள்ளோம்.

இந்த நிலையில் எமது மாணவ சகோதரர்கள் தொடர்ந்து பாடங்களில் கவனம் செலுத்தாமல் வெறும் 'ராக்கிங்'கால் புதிய சக மாணவர்களை இம்சைப்படுத்துவது மிகவும் மனவேதனைக்

போது, பல்கலைக்கழக மேற்படிப்பு எம்மைப் போன்றவர்களிற்கு மிகவும் கசப்புணர்வையே ஏற்படுத்துகின்றது.

ஆகவே பல்கலைக்கழக மாணவ சகோதரர்கள் இப்படியான அநாகரீகச் செயல்களைக் கைவிட்டு, புதிய மாணவர்களைத் திறமையான முறையில் மேற்படிப்பைத் தொடர உதவுமாறு மிக மன வேதனையுடன் கேட்டுக் கொள்கின்றேன்.

இப்படிக்கு
புத்தூர். சி. தமிழ்மறவன்

## பலகலைக்கழகத்தைக் காப்பாற்ற வேண்டும்

ஆசிரியர்,
ஈழநாதம்

உங்கள் 4.9.90. இதழில் வெளிவந்த ஆதவனின் கடிதமும் அதன் அருகே ஊர்சுற்றியார் யாழ். பல்கலைக்கழகத்தைப் பற்றி எழுதிய செய்தியும் வெகுவாக மனதை உறுத்தின.

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் 30 ஆண்டுகளுக்கு முன்பு நடந்த ஒருருகிங் நிகழ்ச்சியால் பாதிக்கப்பட்ட எனது உறவினர் திருமணமாகாத நிலையில், வாழ்க்கைக்கு சுயமாக வருவாய் தேட முடியாத நிலையில், சித்த சுவாதீனமற்ற நிலையில் இந்த நாட்டைவிட்டு அகன்று தமிழ் நாட்டில் வாழ்ந்து கொண்டிருக்கிறார். இதுபோன்று இன்னும் எத்தனை பேர் இந்த அநாசரீகமான நிகழ்ச்சியால் தங்கள் வாழ்வை இழக்கப் போகின்றார்கள்?

யாழ். பல்கலைக் கழகம், தமிழ் நாட்டில் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தைப் போன்றே தமிழர் பண்பாடு, மொழிப்பற்று, இனப்பற்று ஆகியவற்றின் வளர்ச்சிக்காக உருவாக்கப் பட்டது. ஆனால் இந்த 'றாகிங்' நமது சமூதாயத்தை இழிவு படுத்த மேற்கொள்ளும் முயற்சியாக நாம் கருதவேண்டும். ஊர்சுற்றியார் கூறுவதுபோல் ஒரு சிலரால் இது நடத்தப்படுகின்றது என்றும் இந்தப் புல்லுருவிகளை உடனடியாக பல்கலைக் கழகத்தில் இருந்து களைய வேண்டும். விடுதலைப் புலிகளுக்கு தமிழ் ஈழத்தைப் பெற்றுத் தரவேண்டிய கடமை மட்டுமல்ல இந்தச் சமுதாயச் சீரழிவுகளில் இருந்து நமது கண்களிலும் மேலான யாழ். பல்கலைக் கழகத்தைப் பாதுகாக்கவேண்டிய கடமையும் உண்டு. ஆகவே இந்த வருடத்தோடு இந்த அநாகரீகச் செயலுக்கு முடிவெடுக்க விடுதலைப்புலிகள் கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மக்கள் எதிர்பார்க்கிறார்கள்.

ஸ்ரான்லிவீதி
யாழ்ப்பாணம் சு.நடராசன்

## மின்நிலுவை செலுத்தாவிடில் விநியோகம் துண்டிக்கப்படும்

உலக வங்கியின் ஆலோசனையின்படி இலங்கை மின்சாரசபை இனிமேல் மூன்று மாதகாலத்தில் தனது மின்சாரக் கட்டண நிலுவையைப் பெற்றுக் கொள்ளவேண்டும்.

சுமார் இருநூற்று முப்பத்தாறு கோடி ரூபா நிலுவையாக உள்ளதாகவும் அதில் அறுபத்தொன்பது கோடி ரூபா அறவிடப்பட்டுள்ளதாகவும் சபையின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

மின்சாரசபையின் அபிவிருத்தி வேலைகளுக்குக் கடனுதவி தேவையானால் அதன் நிலுவை மூன்று மாதகாலத்தில் பெறப்பட வேண்டும். என உலக வங்கி அறிவித்துள்ளதால் மின்சாரசபை நிலுவைகளை அறவிட தீவிர நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

மூன்று மாதகாலத்தில் நிலுவை செலுத்தாதவர்களின் (அரச திணைக்களம் உட்பட) மின் விநியோகத்தை துண்டிக்கவும் சபை நடவடிக்கை எடுத்துள்ளது. இதன் பயனாகவே மேற்படி நிலுவையில் அறுபத்தொன்பது கோடி ரூபா பெறப்பட்டது.

இதே சமயம் சட்டவிரோதமாக மின்சாரம் பெறுவதை தடுக்கவும் சபை கடும் நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.

யில், சாதித் தடைகளை அகற்றுவதற்குக் கிறிஸ்தவக் கல்வி நிறுவனங்களும் மிகக் குறைவான சேவையையே செய்துள்ளன என்றும், யாழ்ப்பாணத்து ஜனத்தொகையுடன் ஒப்பிடும்போது பிரபல்யமான கிறிஸ்தவக் கல்லூரியில் கல்வி பயிலும் தாழ்த்தப்பட்ட சமூகத்தைச்

கள் என்றும், பெண்களுக்கென்றே சில வேலைகள் வழங்கப்பட்டதாகவும், அவர்கள் பல தடைபாடுகள் மத்தியில் வாழவேண்டியுள்ளது என்றார்.

கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை முன்னாள் அதிபர் செல்வி எஸ்.சின்னப்பு பரிசில்களை வழங்கினார்.

## குடிபோதையில் டாக்டர் தாக்கி ஒருபெண் உட்பட நால்வர் காயம்

(கொழும்பு)

குடிபோதையில் இருந்ததாகச் சந்தேகிக்கப்படும் டாக்டர் ஒருவர், றாகமையில் கொழும்பு வடக்கு அரசாங்க ஆஸ்பத்திரியில் ஒரு பெண் ஊழியரையும், மற்றும் மூன்று ஆஸ்பத்திரி ஊழியர்களையும் தாக்கினாராம்.

இவ்விவகாரத்தில் காயம் அடைந்த ஊழியர் இதே ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார் எனத் தெரியவருகிறது.

டாக்டருக்கு வழமையாக வைக்கப்படும் தண்ணீர், மேசையில் வைக்கப்படாத காரணத்தால் டாக்டர் ஆஸ்பத்திரி மேற்பார்வையாளரை தாக்கியுள்ளார்.

மேற்பார்வையாளர் தாழ்வார வழியாக எங்கேயோ ஓடிமறைந்துவிடவே, மேற்பார்வையாளரின் மறைவிடத்தைக் கூறமறுத்த பெண் ஊழியரையும் டாக்டர் தாக்கியுள்ளார் என்று றாகம ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. வழியில் பெண் ஊழியரைச் சந்திப்பதற்கு முன், அவர் கண்ணில் தென்பட்ட இரு சிற்றூழியர்களையும் டாக்டர் தாக்கியுள்ளதாகச் சொல்லப்படுகிறது.

கட்டுக்கடங்காத நிலையில், டாக்டர் பெண் ஊழியரைப் பலமுறை தாக்கினாரென்றும் பெண்ணின் கண்களைத் தோண்ட எத்தனித்தாரென்றும் சொல்லப்படுகிறது.

சம்பந்தப்பட்ட டாக்டர் குடிவெறியில் கைத்துப்பாக்கியுடன் கடமை நேரத்தில் காணப்படுவது சர்வசகஜம் என்று தெரியவருகிறது.

வேலை நிறுத்த நடவடிக்கையில் இறங்க ஆஸ்பத்திரி ஊழியர் முயற்சித்துள்ளார்கள். சுகாதார அமைச்சு தலையிட்டு தாம் பூரணவிசாரணையை மேற்கொள்வதாக உறுதிமொழியளித்ததும் நிலைமை சட்டுக்கடங்கியது.

சம்பந்தப்பட்ட டாக்டர் வேலையிலிருந்து இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளாராம்.

## பாதிக்கப்பட்ட மாணவருக்கு பாடசாலை உபகரணங்கள்

### மன்னார் து. ம. சங்கம் நடவடிக்கை

மன்னார் மாவட்டத்தில் ஏழ்மையின் நிமிர்த்தமும் இனக்கலவரத்தினாலும் பெரிதும் பாதிக்கப்பட்ட 1000-ற்கு மேற்பட்ட மாணவ மாணவிகளுக்கு 1990ஆம் கல்வியாண்டில் பாடசாலை உபகரணங்களை மன்னார் துயர் துடைப்பு மறுவாழ்வுச்சங்கம், கொழும்பு சிறுவர் பாதுகாப்பு நிதிய உதவியுடன் வழங்கவுள்ளது. இதன் முதல் கட்டமாக இக் காரியாலயத்தில் 500 மாணவர்களுக்கு வழங்கப்பட்டன.

அடுத்த தொகுதி இம்மாத இறுதிக்குள் வழங்கப்படும். 1990-ஆம் ஆண்டு விவசாய திட்டத்தின் கீழ், மன்னார் மாவட்டத்தில் சிறு குளங்களின் கீழ் நெற்செய்கை பண்ணப்படாத காணிகளிலும், மாசி மாதத்தில் அறுவடை மேற் கொள்ளப்பட்ட நெற் காணிகளிலும் உபஉணவுப் பயிர்களான பாசிப்பயறு, கௌப்பி, நிலக்கடலை, டுபாய் பூசணி, மரக்கறி விதைகள் போன்றவற்றை வவுனியா உதவி விவசாயப் பணிப்பாளர் ஒத்துழைப்புடன் இச்சங்கம் தேவையான விவசாயிகளுக்கு விநியோகித்து வருகின்றது. ஏற்கனவே கமநல சேவை நிலையங்கள், மாதர்சங்கங்கள் கிராமஅபிவிருத்திச் சங்கங்கள் போன்றவற்றிற்கு இவை விநியோகிக்கப்பட்டு வருகின்றன. தேவையான விவசாயிகள் இச்சங்கத்தின் செயலாளரிடம் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

இக்கல்வியாண்டில் பின்தங்கிய கிராமங்களில் பாலர்பாடசாலைகளைதொடர்ந்து நடாத்துவதற்கு சிறுவர் பாதுகாப்புநிதி உதவி வழங்க ஒத்துக் கொண்டதின் பெயரில் 15-க்கு மேற்பட்டபாடசாலைகளுக்கு ஆசிரியர் வேதனம் வழங்கப் பட்டு வருகின்றது.

ஏற்கனவே தாய் தந்தையர் அற்ற 100 க்கு மேற்பட்ட சிறுவர்களுக்குபாடசாலைசீருடைகள் வழங்கப்பட்டதும் குறிப் பிடத் தக்கது.

டன் ஒப்பிட முடியாது.

நம் நாட்டு இளம் யுவதிகளை இப்பொழுது வீதிகளில் சைக்கிளிலும் மோட்டார் சைக்கிள்களிலும் பார்க்கும்போது பெருமையாக இருக்கிறது.

சில சமயங்களில் இந்த யுவதிகளை நான்கைந்து பேர் வீதிகளில் சமமாகக் கை கோர்த்துக்கொண்டு சைக்கிள்களில் முன்னாலும் பின்னாலும் வருபவர்களைப் பற்றிச் சிறிதும் சட்டை செய்யாமல் செல்லும் போது என்னவோ போலிருக்கிறது!

இன்று சர்வதேச மகளிர் தினமல்லவா? அதனால் தான் மாளீரைப்பற்றி எழுதியிருக்கிறேன்.

ஆண்களையும் வாழ விடுங்கள் என்று கேட்கலாமா என்று கேட்கிறார் வேலையில்லாத ஒரு இளைஞன்!

## பாம்பு கடிதது மரணம்

(சுழிபுரம்)

பாம்பு கடித்ததால் அறுபது வயது வயோதிபர் ஒருவர் மரணமானார். சுழிபுரம் மேற்கில் நடந்த இச்சம்பவத்தில் வி ராமசாமி என்ற வயோதிபரே பலியானார்.

(17)

## புதிய பௌபர் மூலம் குடிநீர் விநியோகம்

(புங்குடுதீவு)

புங்குடுதீவு நயினாதீவு பலநோக்கு கூட்டுறவு சங்கம் புதிய டிராக்டர் ஒன்றை கொள்வனவு செய்யவுள்ளது. அத்துடன் புங்குடுதீவு மக்களின் குடிதண்ணீர் பிரச்சினையை தீர்க்கும் பொருட்டு புதிய 'பௌசர் ஒன்றையும் கொள்வனவு செய்யவுள்ளது.

இந்த பௌசர் மூலம் சாட்டியிலிருந்து குடி தண்ணீர் எடுத்து மக்களுக்கு விநியோகிக்கப் படும். (22)

## நூல் வெளியீடு

''வங்கியல் சட்டமும் நடைமுறைகளும் பகுதி இரண்டு'' நூல் வெளியீட்டு விழா எதிர் வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணியளவில் மானிப்பாய் இந்துக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும். திரு. துரைசிங்கம் ரகு எழுதிய இந் நூல் வெளியீட்டு விழாவுக்கு சட்டத்தரணி க. குணரத்தினம் தலைமை தாங்குவார். யாழ்ப்பாணம் மக்கள் வங்கி பிரசே முகாமையாளர் ஆர். அருளானந்தன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். சட்டத்தரணி பொன். பூலோகசிங்கம் நூல் ஆய்வுரையை நிகழ்த்துவார்.

ஈழநாதம்

# தாயகம் திரும்பும் இராணுவம் தமிழ் நாட்டில் தங்கும்

இந்தியா இலங்கையில் இருந்து தனது இராணுவத்தை வாபஸ் பெற்றுக் கொண்டாலும், இலங்கைமீது இராணுவ ரீதியாகக் கண்ணோட்டம் செலுத்துவதில் அக்கறையாக உள்ளது என்பதனை அதன் அண்மைக்கால நடவடிக்கைகள் உணர்த்துகின்றன.

(சென்னை)

இலங்கையில் இருந்து நாடு திரும்பும் இந்திய இராணுவத்தின் ஒரு பகுதி டில்லியிலும் தமிழ் நாட்டின் சில முக்கிய பகுதிகளில் நிறுத்தப்படுவார்கள்.

தமிழ்நாட்டில் ஆறு இடங்களிலும் ஆறு மாநிலங்களிலும் இராணுவம் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் தமிழர்கள் வசிக்கும் பகுதிகளில் ஏதேனும் பிரச்சினைகள் ஏற்பட்டால் அவசியம் தேவைப்பட்டால் இந்திய இராணுவம் மீண்டும் இலங்கை செல்லவே இவ்வாறு நிறுத்திவைக்கப்படவுள்ளதாம்.

இதற்கான அவசரச் சட்டம் ஒன்றை இந்திய இராணுவ இலாகா தயாரித்து வருகிறது.

தமிழ்நாட்டில் தஞ்சம்புகும் இலங்கைத் தமிழர் அங்கும் மோதல்களில் ஈடுபட்டுப் பிரச்சினைகளை உருவாக்கினால் அதை சமாளிப்பதற்கும் ஆயத்தமாகவே இராணுவம் இங்கு நிறுத்திவைக்கப்படுகிறதாம்.

அதேவேளை தமிழ் நாட்டில் தனது விமானப்படைத் தளங்களையும் இந்தியா விருத்திசெய்துவருவதும்குறிப்பிடத்தக்கது. மேலும் தமிழ் நாட்டிற்கும் இலங்கைக்கும் இடையில் நடைபெறும் கள்ளத்தனமான கடல் வழிப் போக்குவரத்தை அவதானிக்க கரையோரப்பகுதிகளில் காவற்கோபுரங்களை அமைத்துள்ளமையும் தெரிந்ததே.

## சுத்தானந்தபாரதியார் காலமானார்

முதுபெரும் விடுதலைப் போராட்ட வீரரும் கவிஞருமான யோகி சுத்தானந்த பாரதியார் நேற்று காலை சிவகங்கையிலுள்ள சோழபுரத்தில் அவரது தவக்குடிலில் காலமானார். இவருக்கு வயது தொண்ணூற்று மூன்றாகும். இவரது பாரத மகாகாவியம் என்ற ஐம்பதாயிரம் வரிகளைக் கொண்ட நூலுக்காக 1984 - ஆம் ஆண்டில் இராஜராஜன் விருது வழங்கப்பட்டது.

## கூடிய இலாப நோக்கினால் மக்கள் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

ஒரு சில முதலாளிகளின் அதிகரித்த லாபநோக்கால் தான் சில்லறை விலைக்கு ஐந்து ரூபாவிற்கு விற்கவேண்டிய யானை மார்க் குளிர்பானங்கள் ஆறு ரூபா ஐம்பது சதத்திற்கு விற்கப்படுவதாக யாழ். செயலக பாவனையாளர் விலை கட்டுப்பாட்டு அதிகாரி தெரிவித்தார்.

மொத்த வியாபாரத்தில் ஈடுபடும் இந்தநபர்கள் சில்லறை வியாபாரிகளுக்கு இக் குளிர்பானங்களை வாங்கும்போது தமது நிறுவனத்தின் பெயர் பொறிக்கப்பட்ட ரசீதுகளில் வழங்குவதில்லை இதன்மூலம் அவர்கள் தப்பித்துக் கொள்கின்றனர் என்றும் அவ்வதிகாரி தெரிவித்துள்ளார்.

பாவனையாளர் கட்டளைச் சட்டப்படி இத்தகைய நடவடிக்கைகளை கட்டுப்படுத்த வேண்டும். குழப்பமான நிலைமையினால் இதனை தங்களால் நடைமுறைப்படுத்த முடியவில்லை என்றும் அவ்வதிகாரி கூறியுள்ளார். மேலும் தற்போது நிலைமை சுமுகமாகி வருவதால் விரைவில் இதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என எதிர்பார்ப்பதாகவும் அவ்வதிகாரி தெரிவித்துள்ளார். (லோ)

## இரு கட்சி...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கிறோம். இதுதான் எங்கள் அணுகுமுறை.

மற்றொரு கேள்விக்கு திரு மாத்தையா பதிலளிக்கையில் 'ஆயுதப்படைத்தில் இலங்கை இராணுவம் அதிக நம்பிக்கை

## ஊழியர்கள் நிறுத்தப்படலாம்

(யாழ்ப்பாணம்)

வைத்தியசாலை ஊழியர் சேவைக்கு நீர்வழங்கல் பகுதியிலிருந்து எடுத்து நியமிக்கப்பட்ட ஊழியர்கள் அவ்விடத்திற்கு வேறு நியமனங்கள் செய்யப்படும் இடத்து வேலையிலிருந்து நிறுத்தப்படுவர் என்று யாழ் போதனா வைத்தியசாலை. நிர்வாக அதிகாரி தெரிவித்துள்ளார்.

இவர்கள் வேலை நீக்கம் செய்யப்படும் போது அவர்கள் விரும்பினால் ஒரு தராதரப்பத்திரம் வழங்குவதைத் தவிர வேறு வழியில்லை, இவர்கள் கொழும்புக்கு விண்ணப்பம் செய்து தமது வேலையை பெற்றுக்கொள்ளலாம் என்றும் அவ்வதிகாரி தெரிவித்தார்.

யாழ் வைத்தியசாலையிலிருந்து இருபத்தெட்டு ஊழியர்கள் பரிசாரகர் பயிற்சிக்காக சென்றிருப்பதும், அவர்களுடைய இடத்தை நிரப்புவதற்காக நீர்வளங்கல் பகுதியிலிருந்து பதினைந்து பேரை இப்பதவிக்கு நியமிக்கப்பட்டதும், தெரிந்ததே.

(லோ)

# உதவி அரச அதிபர்கள் இரு அரசுகளின் கீழ் சேவை

நாட்டிலுள்ள அரசாங்க அதிபர்கள் அந்தந்த மாவட்டங்களின் முதல்வர்களாக தொடர்ந்து செயல்படுவதுடன் உதவி அரசாங்க அதிபர்கள் அதே சமயத்தில் மகாணசபைகளின் பிரதிச் செயலாளர்களாவும் கடமையாற்றுவார்கள் என்று ஜனாதிபதி பிரேமதாஸ நேற்று முன்தினம் நடைபெற்ற மாகாண சபைகளின் செயலாளர்கள் அரசாங்க அதிபர்கள் மாநாட்டில் உரையாற்றும்போது கூறினார்.

உதவி அரசாங்க அதிபர்கள் ஒரு அரசாங்கத்தின் கீழ் இரு சாராருக்கு சேவை செய்வார்கள் என்றும் ஜனாதிபதி இங்கு குறிப்பிட்டார்.

உதவி அரசாங்க அதிபர்களின் பணிபற்றி விபரித்துக் கூறிய ஜனாதிபதி பன்முகப் படுத்தப்பட்ட நடவடிக்கைக்கு ஏற்ற வகையிலும் பிரிவு மட்டத்தில் அபிவிருத்தி திட்டங்களை நடைமுறைப் படுத்துவதற்கும், சகல உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளை வலுப்படுத்தவும் அரசாங்கம் தீர்மானித்து உள்ளதாகவும் குறிப்பிட்டார்.

நாட்டில் இருநூற்றி எழுபத்திமூன்று உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்கும் தேவையான ஊழியர்களை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் ஜனாதிபதி மேலும் கூறினார்.

மாகாணசபைகளின் செயலாளர்களும் அரசாங்க அதிபர்களும் நிர்வாக அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பாக ஒருங்கிணைந்த முறையில் ஒத்துழைப்பை மேற்கொள்ள வேண்டும் என ஜனாதிபதி வலியுறுத்திக் கூறினார்.

## இளம் பெண் தற்கொலை

மண்டைதீவைச் சேர்ந்த ரீ. வதனி என்ற இளம் பெண் (18) நஞ்சுக்காய் உண்டு தற்கொலை செய்து கொண்டார் தந்தையுடன் ஏற்பட்ட மனஸ்தாபம் காரணமாகவே இவர் இப்பரிதாபகரமான சாவைத் தழுவிக் கொண்டார் என்று தெரிவிக்கப்பட்டது. (தி)

# என்னால் முடிந்தளவு சேவை செய்வேன்

## புதிய அரச அதிபர்

(யாழ்ப்பாணம்)

யாழ். அரசாங்க அதிபராக நியமனம் பெற்ற திரு அன்ரன் அல்பிரட் அவர்கள் நேற்று பிற்பகல் யாழ். செயலத்தில் உள்ள தமது அலுவலகத்திற்கு வந்திருந்தார்

'பாதிப்படைந்தவர்களுக்கான நிவாரணக் கொடுப்பனவுகள் பற்றி நிறைய அறிந்துள்ளேன். என்னால் முடிந்தளவிற்கு சேவை செய்வேன் என்று அவரைச் சந்தித்த போது தெரிவித்தார்.

'எல்லாம் செய்வேன் என்று கூறி மக்களை எதிர்பார்க்க வைத்து விட்டு, எதுவும் செய்ய முடியாமல் போனால் அது சரியல்ல. செய்ய வேண்டியதை செய்து விட்டு சொல்லத்தான் விரும்புகிறேன்' என்று அவர் குறிப்பிட்டார்

யாழ். அரசாங்க அதிபராக கடந்த வருடம் பணி புரிந்த திரு. தர்மபாலனை அடுத்து திரு. அன்ரன் அல்பிரட்டுக்கு யாழ். அரசாங்க அதிபருக்கான நிரந்தர நியமனம் வழங்கப்பட்டது.

இது இவ்வாறிருக்க, யாழ். பதில் அரசாங்க அதிபராக இதுவரை காலமும் பணி புரிந்து வந்த திரு. மாணிக்கவாசகர் இன்னும் சில தினங்களில் கிளிநொச்சி அரசாங்க அதிபர் பொறுப்பை ஏற்றுக் கொள்வார் என்று தெரிவிக்கப்பட்டது. (தி)

# வெளிவாரி பரீட்சைகளை மட்டக்களப்பில் நடாத்துக

அடுத்த மாதம் நடைபெறவுள்ள பேராதனைப் பல்கலைக்கழக கலை, விஞ்ஞான வெளிவாரி இறுதிப் பரீட்சையை மட்டக்களப்பு மாணவருக்கு மட்டக்களப்பிலேயே தோற்றவுள்ளனர்.

பேராதனையில் தற்போது தங்குமிடவசதிகள் இல்லை என்றும் இதனால் இவர்களுக்கு இங்கேயே பரீட்சைகள் நடைபெற வேண்டும் எனவும்

# மரண அறிவித்தல்

## திருமதி. விஜலச்சுமி கைலைநாதன்

கொக்குவில் செம்பியன் லேனைச் சேர்ந்த திருமதி. விஜயலச்சுமி கைலைநாதன் அவர்கள் 1990. 03. 05 ந் திகதி காலமானார்கள்.

அன்னார் கைலைநாதன் (பிரகாஷ் ரான்ஸ்போட் சேர்விஸ்) அவர்களின் அன்பு மனைவியும், செல்வி. கோபிதாவின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற கரைநகரைச் சேர்ந்த பத்மநாதன், பேரம்மா அவர்களின் அன்பு மகளும், மைலிட்டி தெற்கைச் சேர்ந்த அண்ணாமலை, காலஞ்சென்ற சின்னத்தங்கம் அவர்களின் அன்பு மருமகளும், S. P. S. ரான்ஸ்போர்ட் சேர்விசைச் சேர்ந்த சிவனேசன், சிவலிங்கம், சுத்தானந்தன், சர்வானந்தன், விவேகானந்தன், நடராசா (ஜேர்மன்) சிவபாதம் (ஜேர்மன்) செல்வநாயகம் (சுவீஸ்), சிவராசா (கனடா), சோமசுந்தரம் (சுவீஸ்), சரோஜினிதேவி அவர்களின் அன்புச் சகோதரியும், குப்பிளானைச் சேர்ந்த காலஞ்சென்ற அன்னம்மாவின் பெறா மகளும், பிரகாஷ் ரான்ஸ்போட் சேர்விஸ் காலஞ்சென்ற சந்திரசேகரம், குலசிங்கம், கந்தசாமி, சரஸ்வதி, சரோஜினிதேவி (சுவீஸ்), சகுந்தலாதேவி (சுவீஸ்), தேவராணி ஆகியோரின் அன்பு மைத்துனியுமாவார்.

அன்னாரின் ஈமைக்கிரியைகள் 1990. 03. 10 ந் திகதி சனிக்கிழமை காலை 10. 00 மணியளவில் இல. 44 செம்பியன் வீதியிலுள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுக்துச் செல்லப்படும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறோம்.

இல. 44, செம்பியன் லேன்,
கொக்குவில்.

தகவல்:
குடும்பத்தவர்கள்.

(R.122)

# 2-ம் வருட நினைவஞ்சலி

## கூடிய இலாப நோக்கினால் மக்கள் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

ஒரு சில முதலாளிகளின் அதிகரித்த லாபநோக்கால் தான் சில்லறை விலைக்கு ஐந்து ரூபா விற்க வேண்டிய யானை மார்க் குளிர்பானங்கள் ஆறு ரூபா ஐம்பது சதத்திற்கு விற்கப்படுவதாக யாழ். செயலக பாவனையாளர் விலை கட்டுப்பாட்டு அதிகாரி தெரிவித்தார்.

மொத்த வியாபாரத்தில் ஈடுபடும் இந்தநபர்கள் சில்லறை வியாபாரிகளுக்கு இக் குளிர்பானங்களை வாங்கும்போது தமது நிறுவனத்தின் பெயர் பொறிக்கப்பட்ட ரசீதுகளில் [illegible] வழங்குவதில்லை இதன்மூலம் அவர்கள் தப்பித்துக் கொள்கின்றனர் என்றும் அவ்வதிகாரி தெரிவித்துள்ளார்.

பாவனையாளர் கட்டளைச் சட்டப்படி இத்தகைய நடவடிக்கைகளை கட்டுப்படுத்த வேண்டும். குழப்பமான நிலையினால் இதனை தங்களால் நடைமுறைப்படுத்த முடியவில்லை என்றும் அவ் அதிகாரி கூறியுள்ளார். மேலும் தற்போது நிலைமை சுமுகமாகி வருவதால் விரைவில் இதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என எதிர்பார்ப்பதாகவும் அவ்வதிகாரி தெரிவித்துள்ளார். (லோ)

## ஊனமுற்றோருக்கு நிவாரணம் 5000 ரூ. கிழ[illegible]

(யாழ்ப்பாணம்)

[illegible]

## இதுவரை 270 பேருக்கு ஜெய்பூர் செயற்கைக் கால்

(யாழ்ப்பாணம்)

[illegible]

[illegible]

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

[illegible]

காலை நிவாரணக் கொடுப்பனவுகள் பற்றி நிறைய அறிந்துள்ளேன். என்னால் முடிந்தளவிற்கு சேவை செய்வேன் என்று அவரைச் சந்தித்த போது தெரிவித்தார்.

'எல்லாம் செய்வேன் என்று கூறி மக்களை எதிர்பார்க்க வைத்து விட்டு, எதுவும் செய்ய முடியாமல் போனால் அது சரியல்ல. செய்ய வேண்[illegible] அதிபருக்கான நிரந்தர நியமனம் வழங்கப்பட்டது.

இது இவ்வாறிருக்க, யாழ். பதில் அரசாங்க அதிபராக இதுவரை காலமும் பணிபுரிந்து வந்த திரு. மாணிக்கவாசகர் இன்னும் சில தினங்களில் கிளிநொச்சி அரசாங்க அதிபர் பொறுப்பை ஏற்றுக் கொள்வார் என்று தெரிவிக்கப்பட்டது. (தி)

## வெளிவாரி பரீட்சைகளை மட்டக்களப்பில் நடாத்துக

அடுத்த மாதம் நடைபெறவுள்ள பேராதனைப் பல்கலைக்கழக கலை, விஞ்ஞான வெளிவாரி இறுதிப் பரீட்சையை மட்டக்களப்பு மாணவருக்கு மட்டக்களப்பிலேயே நடாத்த வேண்டும் என கோரிக்கைவிடப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு திருகோணமலை ஆகிய மாவட்டங்களிலிருந்து சுமார் அறுநூறு மாணவர்கள் இப்பரீட்சைக்கு தோற்றவுள்ளனர்.

பேராதனையில் தற்போது தங்குமிடவசதிகள் இல்லை என்றும் இதனால் இவர்களுக்கு இங்கேயே பரீட்சைகள் நடைபெறவேண்டும் எனவும் மட்டக்களப்பு மாவட்ட வெளிவாரிப் பட்டதாரி மாணவர் ஒன்றியத்தலைவர் கேட்டுள்ளார்

## ஈழப்பிரகடனத்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

[illegible]

## மூட்டை முடிச்சு ....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

படி நான் எங்கு வேண்டுமானாலும் போகத் தயார் என்றார்.

இந்திய, இலங்கைஇராணுவ தரப்புச் செய்திகளின்படி, வரதர் மாகாணசபைக்கு முன்னால் அமைந்துள்ள தனது உத்தியோக பூர்வ வாஸஸ்தலத்தில் இருந்து வெளியேறுவதற்கான ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருப்பதாகத் தெரியவருகிறது.

இந்திய இராணுவம் முகாம்களை விட்டு வெளியேறுமுன் வரதர் திருகோணமலையை விட்டுக் கிளம்பிவிடலாம் என்று இத் தரப்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதுவரை 500 பேரைக் கொண்ட ஈ. பி. ஆர். எல். எவ். ஆதரவாளர் குழுவொன்று சென்னை சென்றுள்ளதாம். அடுத்த மூன்று வாரங்களுக்குள் ஈ. பி. ஆர். எல். எவ், ரெலோ, ஈ. என். டி. எல். எவ். ஆதரவாளர்கள் 5000 பேர் சென்னைக்குச் செல்ல இருப்பதாகத் தெரியவருகிறது.

இதற்கிடையில், பெருமாளின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்திற்கு முன்னால் அமைந்திருந்த வடக்கு-கிழக்குமாகாணசபைக்குச் சொந்தமான வீடியோ சென்டரிலிருந்த ரூபா 50.0[illegible] பெறுமதியான உபகரணங்கள் காணாமற் போய் விட்டதாக பொலிஸ் தகவல் தெரிவித்துள்ளது.

வடக்கு-கிழக்கு மாகாண சபையில் [illegible] கடந்த [illegible] பகுதியிலிருந்து [illegible]

([illegible] நியூஸ் பத்திரிகையின் முதற்பக்கத்தில் வெளியிடப்பட்டிருந்தது)

## கண்ணீர் அஞ்சலி

[illegible]

யாழ். இந்துக் கல்லூரி [illegible]

[illegible] சரஸ்வதி, சரோஜினிதேவி (சுவீஸ்), சகுந்தலாதேவி (சுவீஸ்), தேவராணி ஆகியோரின் அன்பு மைத்துனியுமாவார்.

அன்னாரின் ஈமைக்கிரியைகள் 1990. 03. 10 ந் திகதி சனிக்கிழமை காலை 10. 00 மணியளவில் இல. 44 செம்பியன் வீதியிலுள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறோம்.

இல. 44, செம்பியன் லேன்,
கொக்குவில்.

தகவல்:
குடும்பத்தவர்கள்.

(R.122)

## 2-ம் வருட நினைவஞ்சலி



ஈழமண்ணில் மலர்வு 20 - 05 - 1967 ஈழமண்ணுக்காக உதிர்வு 09 - 03 - 1988

## கார்மேகம் சன்முகராஜா (ரவி)

எம் அன்பு மகனே
ஈழ மண் மீட்புக்காய் புறப்பட்டாய்.
ஈன்றெடுத்த எங்களையும் மறந்தாய் .
கோண்டாவில் மண்ணில் எங்கிருந்தோ வந்த
கொடியவர்களினால் கொல்லப்பட்டாய்.
ஐயா நீ இறக்கவில்லை இன்னமும் இருக்கிறாய்.
தமிழ் மக்கள் இதயத்தில் ஆயிரம் விடிவெள்ளிகளில் ஒன்றாய்
நீ யிருந்து தமிழ் ஈழத்தைப் பார்ப்பாய்.

உன் பிரிவை ஆற்றாது துடிக்கும்
அப்பா, அம்மா, சகோதரர்கள்,
அத்தான்மார்கள், நண்பர்கள்.

R.358